உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்




விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

திருப்பம் தரும்

# திவ்ய தேசங்கள்

சிறப்புமிகு சித்திரை சிறப்பிதழ்


உலகப் பிரசித்தி பெற்ற மதுரை
சித்திரை திருவிழாவிற்கு வருகை
தரும் பக்தர்களை வரவேற்கிறோம்...
உலக பிரசித்தி பெற்ற மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர்
பேரருளால் தரம் எங்களுக்கு இறைவன் கொடுத்த வரம்!
தரத்தில் உயர்ந்தது! ருசியில் சிறந்தது! எண்ணெய் குடிக்காத அப்பளம் உண்ண தூண்டும் உன்னத சுவை!
ஸ்ரீராம் அப்பளம்
& புட் பஜார்
SRI RAM APPALAM
Special Quality
SRI RAM APPALAM
Special Quality
UJALA
APPALAM
Export Quality
SRI BALAJI APPALAM
எங்களிடம் தரமான அப்பளம், அப்பளப்பூ, மிளகு அப்பளம், சோவி அப்பளம், கல்யாண அப்பளம், மோதிர அப்பளம், பாய் அப்பளம், மசாலா அப்பளம், சீரக அப்பளம், அரிசி அப்பளம், தக்காளி வடகம், வெங்காய வடகம், சோற்றுக் கூழ் வடகம், ஜவ்வரிசி வடகம், கலர் வடகம் வகைகள்
ஸ்ரீராம் மஞ்சள் தூள், அரிசி மாவு, புட்டு மாவு, முறுக்கு மாவு, பெருங்காயம், பருப்பு வகைகள், மக்ரூன் வகைகள், மோர் வத்தல், சுண்ட வத்தல் மற்றும் ஊறுகாய் வகைகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்
(ஸ்ரீராம் அப்பளம் எண்ணெய் குடிக்காத அப்பளம்)
HACCP CERTIFIED
ISO 9001:2015
தரம்! இறைவன் எங்களுக்கு அளித்த வரம்
Email Id: sriram.rajkumar1989@gmail.com / Web:www.sriramappalam.com
தயாரிப்பு கூடம்: 4/15A அனுப்பானடி சாலை, சிந்தாமணி, மதுரை- 625009
விற்பனையகம்: 51, அம்மன் சன்னதி, மதுரை - 625 001.
தொடர்புக்கு: 98432 60908, 9787932299, 95004 95248, 84388 70908



# குபேரதிசையில் உள்ள
# ஸ்ரீகுபேர வீர ஆஞ்சநேயர் கோவில் குப்பாபிஷேகம்

ராணிபேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் காமாட்சி புரத்தில் குபேரதிசையில் உள்ள ஸ்ரீகுபேரவீர ஆஞ்சநேயர் திருக்கோவில் திருப்பணிகள் முடிக்கபட்டு மே மாதம் 17-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை மகாகும்பாபிஷேகம் விழா நடைபெற உள்ளது.

பக்தர்களால் நவகிரககோட்டை என சிறப்புப் பெயருடன் அழைக்கப்படும் இத்திருக்கோவில், நினைத்ததை நிறைவேற்றும் பிரார்த்தனை கோவிலாக பக்தர்களால் வணங் கபட்டு வருகிறது. எழில்மிகு கலைவேலைபாடுகளுடன் ஆஞ்சநேயர் சுதை வேலைபாடுகள் தத்ரூபமாக உள்ளது.

வரும் 22-ந்தேதி காலை 9மணிக்கு மஹாபூர்ணாஹதி பூஜையும் அதைதொடர்ந்து கோபுரம் மஹாகும்பாபிஷேகம் பரிவார தெய்வங்கள் மற்றும் மூலஸ்தான மஹாஅபிஷேகம் நடைபெறுகிறது.

இங்கு உள்ள புண்ணிய தீர்த்தகுளம் திருப்பணிகள்செய்து முடிக்க பட்டுள்ளது. கும்பாபிஷேகம் திருபணிகள் பற்றி சிவம் சேவா டிரஸ்ட் நிறுவனர் குருஜி ஸ்ரீராஜிவ்சிவம் கூறியதாவது...

ஸ்ரீகுபேரே வீர ஆஞ்சநேயர் கும்பாபிஷேகம் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

ஸ்ரீகுபேர வீர ஆஞ்சநேயர் ஆன்மிக அறக்கட்டளை அங்கத்தினர்கள் காமாட்சி புரம் மற்றும் ஊர் மக்கள் ஒத்துழைப்புடன் இந்த கும்பாபிஷேக கைங்கர்ய சேவா பணிகள் நடைபெற்றுவருகிறது.

ஸ்ரீ இராமபக்தரான ஆஞ்சநேயரின் பிறப்பே அபூர்வ மானது. அனுமனின் லீலைகளும் அவர் புரிந்த அற்புதங் களும் சொல்லில் அடங்காதவை. இராம நாமம் ஜெபிப்ப வர்களுக்கு என்றும் உறு துணையாக இருந்து அவர்களது துயரங்களைப் போக்குவதில் அனுமரை விடவும் சிறந்தவர் எவரும் கிடையாது.

அப்பேர்ப்பட்ட அஞ்சனை மைந்தனான ஸ்ரீ ஆஞ்சநேயர் இந்த மண்ணுலகில் எண்ணற்ற திருத்தலங்களில் மாறு பட்ட கோலங்களில் எழுந்து, ஸ்ரீஇராம பக்தர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துள்ளார்.

அவ்வகையில் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா பேட்டை நகரின் கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு என நான்கு திசைகளிலும் கோவில் கொண்டெழுந்து அருள்பாலித்து வருகின்றார்.

அவற்றுள் நகரின் வடக்குதிசையில் ஸ்ரீகாமாட்சிபுரத்தில் எழுந்தருளும் அனுமன் மிகவும்பிரசித்தம். வடக்கு திசையான குபேர திசையில் இவர் கோயில் கொண் டிருப்பதால் பக்தர்களால் இவர் ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயர் என்று அழைக்கப்படுகின்றார்.



ஆதியில் அகத்தியர் ஸ்தாபித்த சிவாலயம் இங்கு இருப்பது சிறப்பு. முன்னொரு காலத்தில் இந்தப் பகுதியில் வாழ்ந்த பலர் பலவித நோய்களால் அவதியுற்றனர்.

அப்போது ஆற்காட்டை சுற்றி வாழ்ந்த மகான்கள் சிலரது சிந்தனைக்கு எட்டியது இந்தத் தகவல். அவர்களது ஆலோசனைப்படி வாலாஜாபேட்டையில் நான்கு திசைகளிலும் நான்கு ஆஞ்சநேயர் ஆலயங் கள் ஸ்தாபிக்கப்பட்டு, பூஜைகள் நடத்தப்பட்டது.

இதன்பின் பலரது வியாதிகள் நிவர்த்தி அடைந் துள்ளது. இன்றும் இந்த நிகழ்வை பலர் நினைவு கூறுவது அஞ்சனை மைந்தருக்கே வெற்றி. சுமார் 1000 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆஞ்சநேயர் பூமியில் இருந்து கிடைக்கப் பெற்றவர்.



குருஜி ஸ்ரீராஜிவ்சிவம்






தனது இடது கரத்தை இடுப்பில் ஊன்றியவாறு கதாயுதத்துடன் வலது கரத்தை மேல்நோக்கி வைத்தபடி தனது திருமுகத்தை ஆகாயம் பார்த்த வண்ணம் திருக் கோலம் கொண்டுள்ளார். இவருக்கு கீழே ஸ்ரீஇராமர் பாதம் உள்ளது சிறப்பு. இவரது வால் தலைக்குமேல் சுழன்று நிற்கும் வாலின் நுனியில் மணி ஒன்று இருக் கும். இவ்வகை அமைப்பிலான அனுமன் சிலை ஸ்ரீ மத்வாச்சாரியார் ஸ்தாபித்தது என்பர். இந்த கோலத்தை பிற தலங்களில் காண இயலாது.

வடக்கு முகம் பார்த்த சிறியதொரு ஆலயம். ஆலயத்தின் எதிரே விஜயநகர மன்னர்களால் ஏற்படுத்தப்பட்டதிருக்குளம் அமைந்துள்ளது. தற்போது இக்குளம் மிக நேர்த்தியாக அழகாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.

அதோடு, இவ்வாலயத்தில் நாகராஜர் சிலைகளும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது விசேஷம்.

மேலும் பத்தினி மற்றும் வாகனத்துடனான நவகிரகங்கள், அதோடு ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி அம்பாள் மற்றும் ஸ்ரீ மஹா பெரியவா விக்கிரகங்களும் நிறுவப்பட்டுள்ளது.

ஸ்ரீ மஹா பெரியவா தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அனுமனை வணங்கும்படியும், ஸ்ரீஇராம நாமத்தை ஜபிக்கும்படியும், ஸ்ரீஇராம ஜெயம் எழுதும்படியும் பலமுறை வலியுறுத்தியுள்ளார்.

அவரது வாக்கின்படி அன்பர்கள் எழுதிய ஸ்ரீஇராமஜெயம் எனும் மந்திரங்கள் பல கோடி ஸ்ரீராமஜெயம் ஜபமந்திரம் பிரதி ஷ்டையுடன் நடைபெறுகிறது. இங்கு பரிவாதெய்வங்கள் நவகிரககணபதி, கண்திருஷ்டி கணபதி, ஸ்ரீராமர்சீதா லெட்மணர் சன்னதி, ராமர் பிறந்தது முதல் பட்டாபிஷேகம் வரை தத்ரூபமாக உள்ளது. இங்கு உள்ள சன்னதியில் ஐஸ்வர்யம் தரும் 108 தெய்வ சிலைகளை இங்கு பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

செல்வம், ஆரோக்கியம் கடன் நிவர்த்தி, வியாபாரம், உத்தியோகம், திருமணம், பிள்ளைவரம், சனிதோஷ நிவர்த்தி போன்ற பல கோரிக்கைகள் நிறைவேற ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயரை வேண்டி நிற்போம்.

22.05.2023 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு மங்கள இசை, வேத பாராயணம், நான்காம் கால அவப்ருத யாகம், மூலிகை ஹோமங்கள், ரஹஸ்ய மந்திர ஆஹுதி, அஸ்த்ராஹுதி யந்திரா தான சங்கல்பம், மஹா வஸ்த்ர ஆஹுதி, சௌபாக்ய த்ரவ்யாஹுதி, மஹா மங்கள ஆரத்தி நடைபெற உள்ளது.

மேலும் காலை 9 மணிக்கு மஹா பூர்ணாஹுதி, 9.15 மணிக்கு கலச புறப்பாடு, 9.30 மணிக்கு கோபுர மஹா கும்பாபிஷேகம், 10 மணிக்கு மூலஸ்தான மஹா கும்பாபிஷேகம், 10.15 மணிக்கு பரிவார மஹா கும்பாபி ஷேகம், ரத பிரதிஷ்டை, 10.30 மணிக்கு மஹா மங்கள தீபாராதனை, 11 மணிக்கு மஹா அபிஷேக வைபம், 12மணிக்கு சிறப்பு அன்னதானம் நடைபெறவுள்ளது.

மேலும் இத்திருக்கோவில் திருப்பணியில் பங்கு கொண்டு ஸ்ரீஇராமபிரான், அனுமன் திருவருள் பெற்று வாழ்வில் சிறந்திடுவோம். மகாகும்பாபிஷேகம் மற்றும் ஆலய தகவல்களுக்கு 6379101306 என்ற எண்ணுக்கு தொடர்புகொள்ளலாம்.








இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை, காமாக்ஷிபுரத்தில்

(ஸ்ரீபடவேட்டம்மன் கோயில் எதிரில்) BDO ஆபிஸ் பின்புறம்

# ஸ்ரீ குபேர வீர ஆஞ்சனேயர் திருக்கோயில்

## நவக்ரஹ கோட்டை (நினைத்ததை நிறைவேற்றும் பிரார்த்தனை கோயில்)

(221 கோடி ஸ்ரீராமஜெயம் லிகித ஜப மந்திர பிரதிஷ்டையுடன்)

# மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

17.5.2023 முதல் 22.5.2023 வரை மஹா கும்பாபிஷேக விழா கைங்கர்ய சேவா



ஸ்ரீ குபேர வீர ஆஞ்சநேயர் ஆன்மீக அறக்கட்டளை அங்கத்தினர்கள்,
காமாஷிபுரம் மற்றும் ஊர் பொதுமக்கள், பக்தர்கள், வாலஜாபேட்டை




வேத சிவகாம வித்யா பூஷணம் **குருஜி ஸ்ரீ ராஜீவ் சிவம்**

நிறுவனர், சிவம் சேவா டிரஸ்ட், வாலஜாபேட்டை +91 6379101306

**கும்பாபிஷேக கைங்கர்யங்கள் வரவேற்கப்படுகிறது**

குறிப்பு: தங்களால் இயன்ற கும்பாபிஷேக கைங்கர்யங்களான கோபுரக் கலசம், பித்தளை, சொம்பு, குடம், மூலிகை பொருட்கள், புஷபம், வஸ்த்ரம், தேங்காய், பழம், நிவேத்தியம், அருட்பிரசாதபை, சுவாமி படம், அன்னதானம் போன்ற கும்பாபிஷேக கைங்கர்யங்கள், திரவிய உதவிகளை பணமாகவோ, பொருளாகவோ இறைவனின் பாதார விந்தங்களில் சமர்ப்பணம் செய்து சரணாகதியோடு வழிபடும்போதும் எண்ணிய அனைத்தும் கைகூடும் என்பது திண்ணம். ஜெய் ஸ்ரீராம்... ஸ்ரீராம ஜெயம்

With regards, Temple authorised of **Sivam Seva Trust** (Reg.No.95/2020)



தெய்வீக திருக்கைங்கர்யத்தில் பங்கு கொள்வதற்கு

## Trust Accounts Details

| | | |
|---|---|---|
| Account Name | : | SIVAM SEVA TRUST |
| Account No. | : | 1764135000003610 |
| IFSC Code | : | KVBL0001764 |
| Bank Name | : | Karur Vysya Bank (KVB) |
| Branch | : | Ranipet |
| Google pay | : | +91 6379101306 |

We Prefer Paytm

குறிப்பு: மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 48 நாட்கள் தொடர்ந்து மண்டல பூஜை நடைபெறும், அந்த விசேஷ ஹோம, அபிஷேக அலங்கார அன்னதான விழாவில் பங்கு கொள்ள பக்தர்கள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**வழித்தடம்:** Route Map



கூகுள் மேப்-ல் ஸ்ரீகுபேர வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் நவக்ரஹ கோட்டை (Sri Kubera Veera Anjaneyar Temple Navagraha Kottai) என்று தேடினால் லொக்கேஷன் மேப் லிங்க் கிடைக்கும்.

வழித்தடம்: சென்னை To பெங்களூர் ஹைவே-ல் வாலாஜா டோல்கேட் அடுத்து வலதுபுறம் வாலஜாபேட்டை டவுன்

பஸ் ரூட்: சென்னை To வேலூர் பேருந்தில் வாலாஜாபேட்டை ஸ்டாப்பிங்

ரயில் மார்க்கம்: சென்னை To பெங்களூர் ரயிலில் வாலாஜா ரோடு ல் இறங்கவும்

பஸ் ஸ்டாண்ட் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி ஆட்டோ மூலமாகவும் கோவிலுக்கு வரலாம்

aanmeegamalar.com







# வானரவீரர்களுக்கு வீரம் கொடுத்த ராமன்

ராமாயண காலத்தில் ராமபிரான் இலங்கை சென்று போரிட வானர படை களை அனுமன் தலைமையில் தயார் செய்து அனுப்பிய போது பிருந்தாவன காட்டில் வந்த வானர படைகள் அங்கு உள்ள பழங்கள் மற்றும் இயற்கை உணவுகளை உண்டு மயங்கின.

இலங்கை சென்று போரிடுவதை மறந்து காட்டில் மயங்கி இருந்த போது அங்கு வந்த ராமபிரான் வான படைகளுக்கு எதற்காக நாம் வந்தோமோ அதை மறக்க கூடாது.

செய்கின்ற பணிகளை கவனமுடன் பல கஷ்டங்கள் வந்தாலும் கடமையை முடித்து காட்ட வேண்டும் என உப தேசம் செய்தார்.

ராமரின் உபதேசத்தை வானர படைகள் தலை வணங்கி ஏற்று கொண்டு ஒற்றுமையுடன் அனுமன் தலைமையில் இலங்கை செல்ல கடலில் பாலம் அமைத்து சென்று போரில் வென்று சீதையயை மீட்டு மீண்டும் இதுபோன்று நிகழ்வுகள் நடைபெறகூடாது.

என அனுமனுக்கு ஆசி வழங்கி மகுடம் சூட்டியதாக கூறப்படுகிறது. அதன் நினைவாக மாவலி மன்னர் வீர அழகர் கோவிலை மானாமதுரை வைகைஆற்றில் கட்டி அதில் வீர ஆஞ்சநேயர் தனிசன்னதியும் அமைத் தார்.

வானர படைகள் இங்கு வீரம்பெற்ற தால் வானர வீரமதுரையாக இருந்து பின் மருவி மானாமதுரை என அழைக்கபடுகிறது. ராமர், அனுமார் பாதம் பட்ட பகுதியாக மானாமதுரை உள்ளது. வானர படைகள் பழங்கள் உண்டு மயங்கிய பிருந்தாவனம் தற்போது அதே பெயரில் பிருந்தாவன தெருவாக தற்போது உள்ளது.

வானரர்கள் இங்கு வீரபெற்றதால் வீர ஆஞ்சநேயர், ஜெயவீர ஆஞ்சநேயர் என மானாமதுரை ரயில் நலையத்தில் தொடங்கி வைகை கரையோரம் வரை ஏராள மான அனுமன் கோவிலாக மானாமதுரை யில் இப்போது கணலாம்.

ராமர் சென்ற காலடி முழுவதும் இலங்கை வரை இப்போதும் ராமர் ஆஞ்சநேயர் கோவில்கள் உள்ளது. மானாமதுரையில் வீர ஆஞ்சநேயராகவும், குறிச்சியில் காசிஅனுமராகவும் பக்த்தர்களால் வணங்கபட்டு வருகிறது.




கள்ளழகரை வரவேற்கும்
மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்
Visit: www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1


# காயத்ரி மந்திரத்தின் 24 தத்துவங்களை பக்தருக்கு உணர்த்தும்

# அத்திவரதர்



2019–ல் உலக மக்களால் பேசப்பட்ட ஹாட் டாப்பிக் என்றால் அது அத்திவரதர் தான். காஞ்சிபுரத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றுமே சிறப்புடையதாகும். இந்திய நாட்டின் நூற்றெட்டுத் திருப்பதிகளில் முக்கியப் பதிகளாக உள்ள நான்கினில் ஒன்றாக விளங்குவது தான் வரதராஜப் பெருமாள் கோயில். முக்தி தரும் ஏழு புண்ணிய திருத்தலங்களில் காஞ்சியும் ஒன்று. காஞ்சிபுரம் என்றாலே முதலில் நம் நினைவுக்கு வருவது காமாட்சி அம்மன் தான். இந்த காமாட்சி அம்மனை வணங்கினால் முப்பெரும் தேவியரை ஒருசேர வணங்கிய பலன் நமக்குக் கிடைக்கும்.

அத்தி மரத்தினாலேயே ஆனவர் என்பதால், பெருமாளுக்கு அத்தி வரதர் என்று பெயர் வந்தது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாளுக்குப் பல பெருமைகள் உண்டு. தமிழ்நாட்டிலேயே ஏன் இந்தியாவிலேயே எந்த ஒரு கோயிலிலும் இல்லாத பல சிறப்பு அம்சங்கள் இந்த கோயிலில் உள்ளன. அப்படிப்பட்ட பழங்கால புராதன பெருமை வாய்ந்த இந்தக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அத்திவரதரை தரிசனம் செய்ய நாம் நிச்சயம் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

பிரம்மா செய்த யாகத்திலிருந்து வந்ததாகவும், மூலவராக இருந்து மறைக்கப்பட்டவர் என்றும் அத்தி வரதர் குளத்தில் எழுந்தருளியதைப் பற்றி பலவாறு கூறப்பட்டு வந்தாலும், அவரின் திருவுருவம் முழுவதும் அத்தி மரத்தால் ஆனது. பொதுவாக அத்திமரக் கட்டைக்குப் பல விஷேசங்கள் உண்டு. புவி ஈர்ப்பு விசையை தடுத்து நிறுத்தக்கூடிய ஆற்றல் கொண்டது. எளிதில் பூமியில் ஈர்க்கப்படாது. மற்ற மரங்களை விட அத்திமரத்துக்கு தண்ணீரில் ஊற ஊற அதன் பளபளப்பு அதிகமாகும் என்பதால் தான் அத்திவரதர் கருங்கல்லில் செய்தது போன்று இன்றும் பொலிவுடன் காணப்படுகிறார்.

நம் எல்லோருக்கும் ஒரு சந்தேகம் இருக்கும்.. ஏன் அத்திவரதரை 40 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெளியே எடுக்கிறார்கள், ஏதாவது கணக்கு இருக்குமோ?

இதற்கு முன்னதாக 48 ஆண்டுகளுக்கு ஒரு முறை யும், 54 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் ஸ்வாமியை வெளியே எடுத்துள்ளனர். ஆனால், மனித வாழ்நாளில் ஒருமுறை யேனும் இந்த பெருமாளைத் தரிசிக்கவேண்டும் என்று பக்தர்களின் கோரிக்கைக்கிணங்க, பெருமாளே தன்னை 40 வருடத்திற்கு ஒருமுறை வெளியே எடுத்து 48 நாட்கள் வழிபடப் பணித்துள்ளார்.


கோயிலின் மற்றொரு சிறப்பு என்றால் அது 24. ஏன் 24? குளத்திற்கு அடியில் உள்ள அத்தி வரதரைப் பார்க்க வேண்டுமென்றால் 24 படிகள் கீழிறங்கி தான் செல்ல வேண்டும். கோயில் மூலவர் வரதராஜரைப் பார்க்க வேண் டும் என்றால் 24 படிகள் மேலே ஏறித்தான் செல்ல வேண்டும். இந்த கோயில் 24 ஏக்கர் பரப்பளவில் 24 நிலை களைக் கொண்டுள்ளது. இவை காயத்ரி மந்திரத்தின் 24 தத்துவங்களை உணர்த்துகின்றன.

இசை மும்மூர்த்திகளில் ஒருவரான ஸத்குரு தியாகராஜ சுவாமி, வேங்க ரங்கய்ய தாஸர், சென்னையை சேர்ந்த ஸ்ரீ நிவாஸ ராமாநுஜதாஸர் என பலர் அத்திகிரி பேரருளாளனை நாம சங்கீர்த்தனத்தால் சேவித்து அருள்பெற்ற மகான்கள்.

கடந்த 1979ல் மட்டும் நாடு எங்கிலும் இருந்து பல லட்சம் பக்தர்கள் அத்திவரதரை தரிசித்துள்ளனர். காஞ்சிபுரம் யாத்திரை ஸ்தலமாக விளங்குவதன் முக்கியத்துவத்தை மக்கள் அறிய காஞ்சிபுரம் தபால் நிலையத்தில் விசேஷ தபால் முத்திரை பொறிக்கப்பட்டது. சுமார் 6480 தபால் உரைகளில் இந்த விசேஷ முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது.

அத்திவரதர் எழுந்தருளியிருக்கும் நாட்களில் அஸ்தம், திருவோணம், ரோகிணி நட்சத் திரக்காரர்கள், உங்கள் நட்சத்திரம் எப்பொழுது வருகிறதோ அதற்கு ஏற்ப வழிபாடு செய்வது மிகவும் நல்லது.

அத்திகிரி வரதர் அஸ்த நட்சத்திரத்தில் அவதரித்தவர் என்பதால் அஸ்த நட்சத்திரக்காரர்கள் ஜென்ம நட்சத்திரம் எப்போது வருகிறதோ அன்றைய தினம் அத்திவரதரை வழிபட்டால் வாழ்வில் அனைத்து வெற்றியையும் அடைவர். மகாவிஷ்ணுவுக்கு மிகவும் உகந்த திருவோணம் மற்றும் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் அவர்களுடைய நட்சத்திர தினத்தில் அத்திவரதரை வழிபட்டால் சகல







சௌபாக்கியங்களையும் அடையலாம்.

பரத்வாஜ முனிவரின் அறிவுரைப்படி பிரகஸ்பதி இங்கு வந்த பெருமாளை வழிபட்டு சாப விமோசனம் பெற்ற திருத் தலமாக இது உள்ளது. எனவே, இங்கு வந்து வழி பட்டால் குரு பகவானால் ஏற்பட்ட தோஷங்கள் அகலும் என்பது ஐதீகம்.

அத்திவரதர் இதற்கு முன்னதாக 1854, 1892, 1937, 1979 ஆகிய ஆண்டுகளில் வெளியே வந்து எழுந்தருளி னார். தற்போது 2019ம் ஆண்டில் காட்சி கொடுத்தார் அத்திவரதர், அடுத்து, 2059ல் தான் பக்தர்களுக்குக் காட்சியளிப்பார்.

ஒவ்வொருவரும் அவரது ஆயுள்காலத்திற்குள் ஒரு முறை, தவறினால் இருமுறைதான் இந்த பெருமாளைத் தரிசிக்க முடியும். ஆனால் மூன்று முறை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்களும் இருக்கிறார்கள். அந்த வகையில் 3 முறை தரிசிக்கும் பேறு பெற்ற சென்னையைச் சேர்ந்த ஏ.எம் ராஜகோபாலன் கூறுகையில், இதற்கு முன்பு 1937, 1979ம் ஆண்டுகளில் தரிசனம் செய்தேன். தற்போது மூன்றாவது முறையாக அத்திகிரி அருளாளனை தரிசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது. அவரைத் தரிசித்த போதுதான் விஸ்வகர்மாவைத் தவிர இதுபோல பகவானின் திருமேனியை வடிக்க யாராலும் இயலாது என்று பிரமித்துப் போனேன்.. என்றார்.

மிக தொன்மையான அத்தி வரதர் உற்சவத்தில், திரு விழா வழிபாட்டுடன் சேர்த்து மொத்தம் 48 நாள்களுக்கு அத்தி வரதரை கண்குளிரத் தரிசனம் செய்யலாம்.

இத்தலத்தின் சிறப்புகள்

- ❖ உற்சவருக்கு, "அழைத்து வாழ வைத்த பெருமாள்' என்ற வித்தியாசமான பெயர் இருக்கிறது.
- ❖ கீதையில் கிருஷ்ண பகவான், தனது வடிவமாகக் குறிப்பிட்ட அரச மரமே இத்தலத்தின் விருட்சம். மரத் தின் எதிரே கரியமாணிக்க வரதர் சன்னதி உள்ளது. புத்திரதோஷம் உள்ளவர்கள் அமாவாசையுடன், திங்கள்கிழமை சேர்ந்த நாளில் மரத்தையும், சன்னதியையும் சுற்றிவந்து வழிபடுகிறார்கள்.
- ❖ வைகாசி பிரம்மோற்ஸவம், ஆனி சுவாதி மற்றும் ஆடி கஜேந்திர மோட்ச நாட்களில் சுவாமி கருடசேவை காண்கிறார்.
- ❖ ராமானுஜருக்காக கண்களை இழந்த கூரத்தாழ்வார், பார்வை பெற்ற தலம் என்பதால், கண் நோய் நீங்க இங்கு வேண்டிக்கொள்கின்றனர்.
- ❖ காயத்ரி மந்திரத்தின் 24 அட்சரங்களைக் குறிக்கும் விதமாக மூலஸ்தான படிகள், மதிலில் பதிக்கப்பட்ட கற்கள், தீர்த்தக்கரை படிகள் ஆகியவை 24 என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன

அத்தி மரத்தால் ஆன சிலைகள் உள்ள மற்ற தலங்கள்

- ❖ திருவொற்றியூர், திருக்கானாட்டு முள்ளூர் ஆகிய திருக்கோயில்களில் இரண்டாவது தலவிருட்ச மாக அத்திமரம் வணங்கப்படுகிறது.
- ❖ காஞ்சிபுரம் அத்தி வரதரைப் போல உடுப்பி கிருஷ் ணன் சிலை அத்தி மரத்தில் செய்யப்பட்டது.
- ❖ திருமலையில் தலதீர்த்தமாகிய குளத்திலும் அத்தி வரதர் எழுந்தருளியுள்ளார்.
- ❖ வானமுட்டிப் பெருமாள் ஆலயம் மயிலாடுதுறை அருகே சுமார் 5 கி.மீ. தூரத்தில் கோழி குத்தி என்ற சிறு கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த ஆலயத்தின் மூலவர் அத்தி மரத்தைக் கொண்டு சிலையாக வடிக்கப்பட்டுள்ளது. பெருமாள் விஸ்வரூபமாக இருந்ததால் வானமுட்டிப் பெருமாள் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாம்.







மதுரை, மானாமதுரை, பரமக்குடியில் சித்திரை திருவிழா
காண வரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!

# ஸ்ரீ பேச்சி அம்மன்

## டிரான்ஸ் போர்ட் & டிரேடர்ஸ்
## சேம்பர் பிரிக்ஸ் & ரியல் எஸ்டேட்

எங்களிடம் உயர்தரமான
அளவில் பெரிய சேம்பர்
செங்கல் கிடைக்கும்
பொறியாளர்கள் பில்டிங்
ஒப்பந்ததாரர்கள் அணுகவும்




உரிமையாளர் **எம்.கந்தசாமி**
செல் 9843789337 9487059737



அலுவலக முகவரி
**பிளாட் 1&2 செல்வபுரம் மெயின்ரோடு, குகன் பள்ளி அருகில், தெப்பக்குளம், மதுரை–625009**

சேம்பர் முகவரி
**கிருங்கா கோட்டை முத்தனேந்தல் அருகில்
மதுரை–ராமேஸ்வரம் பை–பாஸ் ரோடு மானாமதுரை**

aanmeegamalar.com



# 7ற்கு முக்கியத்துவம் தரும் ஸ்ரீ ரங்கநாதர்

திருவரங்கம், ஸ்ரீ ரங்கம் என்ற சிறப்பு பெயர்களில் அழைக்கப்படும் இத்தலம் 108 வைணவத் திருத்தலங்களுள் முதல் திருத்தலமாகும். சோழ நாட்டு திருப்பதிகளில் முதன்மை தலமாகவும், பூலோக வைகுண்டம் என அழைக்கப்படுகிறது. காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளால் சூழப்பட்ட 600 ஏக்கர் தீவாக ஸ்ரீரங்கம் உள்ளது . தீவில், சிறப்புமிக்க 108 வைணவத் திருத்தலங்களுள் முதன்மையான மிகப் பெரிய அரங்கநாதசுவாமி கோயிலின் ஏழு சுற்று மதில்களுக்குள் அமைந்துள்ளது.

இத்தலம் 7ம் எண்ணிற்கு முக்கியத்துவம் தருவதாக உள்ளது சிறப்பு. இந்தியாவில் எத்தனையோ பெரிய ஆலயங்கள் இருந்தாலும், இந்த ஆலயத்தில் மட்டும் 7 பிரகாரங்கள் உள்ளன. 7 மதில்கள் உள்ளன.

ஸ்ரீதேவி, பூதேவி, துலுக்க நாச்சியார், சேரகுலவல்லி நாச்சியார், கமலவல்லி நாச்சியார், கோதை நாச்சியார், ரங்க நாச்சியார் என ஏழு தாயார்கள் இந்த ஆலயத்தில் உள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் 7 உற்சவம், 7 திருவடி சேவை, என எல்லாமே 7 அதிசயங்கள் நிறைந்ததாக உள்ளன.

ரங்க விமானம், அசையும் கொடிமரம், ஸ்ரீராமானுஜரின் திருமேனி, தேயும் அரங்கனின் செருப்புகள், அரங்கனின் ஜொலிக்கும் திருக்கண்கள், வளரும் நெற்குதிர்கள், ஐந்து குழி மூன்று வாசல் என்று ஏழு சிறப்புகள் உள்ளது.

இந்த ஆலயத்தில் உள்ள ஸ்ரீ ரங்க விமானம் சுயம்புவாக உருவானதாகக் கூறப்படுகிறது.

இதற்கு 24 கிமீ தூரம் சுற்றி எங்கிருந்து வழிபட்டாலும், இறைவனின் திருவடியை அடையக்கூடிய முக்தி நிச்சயம் என்கிறது ஸ்ரீரங்க தலவரலாறு.

பொன்னால் வேயப்பட்ட இந்த விமானம் ஓம் என்ற பிரணவ வடிவில் எழுந்தருளி உள்ளது.


இந்த தங்க விமானத்தில் அமுதக் கிண்ணத்துடன் பரவாசு தேவர் காட்சியளிக்கிறார். அந்த அமுதக் கிண்ணம் மெல்ல மெல்ல அவர் வாய் நோக்கி நகர்ந்து போவதாகவும், எப்போது அது அவரின் வாயருகில் சென்று சேர்கிறதோ அப்போது இந்த உலகம் அழியும் என்ற நம்பிக்கை நிலவுகிறது.

ஸ்ரீரங்கத்தில் உள்ள ரெங்கவிலாஸ் மண்டபத்தில் உள்ள கல் கொடிமரத்தின் முன் நாம் விழுந்து வணங்கி, கொடி மரத்தை உயர்ந்து நோக்கினால், அந்த கொடிமரம் அசைவது போல நம்மை ஆச்சரியப்படுத்தும் விதமாக இருக்கும் என பலரும் தெரிவிக்கின்றனர்.

அப்படி கொடிமரம் அசையும் விதமாக காட்சி அளித்தால், நம் வேண்டுதலை இறைவன் ஏற்றுக் கொண்டதாக நம்பிக்கை.

உ
எல்லா புகழும் கோவிந்தனுக்கே!
பாரம்பரியமிக்க அறுசுவை உணவிற்கு
திருமணம் மற்றும் அனைத்து வீட்டு விஷேசங்களுக்கு காண்ட்ராக்ட் முறையில் குறைந்த செலவில் சிறந்த முறையில் கேட்டரிங்க சர்வீஸ் செய்து தரப்படும்
S.B. அய்யங்கார்
T-TRUST R-REAL S-SERVICE
TRS
கேட்டரிங் சர்வீஸ்
154/3, வடக்கு வெளி வீதி, சிம்மக்கல், மதுரை-625 001
B.O.:99/4, West adaivalanjan Street, Srirengam, Trichy, Cell:99528 06827
(0452) 4373140, 9443177140
63 810 58 599, 86 750 90 267
aanmeegamalar.com

# மேன்மைதரும் மேற்கு நோக்கிய விநாயகர்



நம் வாழ்வில் மேன்மை களை தரும் மேற்கு நோக்கி பக்தர்களுக்கு அருள் பாலிக் கும் சித்தி புத்தி விநாயகர் கோவில் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வைகை ஆற்றின் கீழ்கரையில் அமைந்து உள்ளது. கங்கை போல் வடக்கு தெற்காக பாயும் மானாமதுரை வைகை ஆற்று கரையில் மேற்கு திசை நோக்கி சித்தி புத்தி விநாயகர் கோவில் மட்டுமே உள்ளது.

பல ஆண்டு காலம் அரச மரத்தை தல விருட்சமாக கொண்ட இக்கோவிலில் சங்கடஹர சதுர்த்தி, வருஷாபிஷேகம், விநாயகர் சதுர்த்தி நாட்களில் பல வகை அபிஷேகங்களுடன்

சிறப்புபூஜை நடைபெறுகிறது. மானாமதுரை பகுதியில் உள்ளவர்கள் வீட்டு விசேஷ பத்திரிகைகளை இங்கு இங்கு வந்து வைத்து மேற்கு நோக்கி

காணப்படும் சித்தி புத்தி விநாயகரை வணங்கிய பின் தங்கள் வீட்டு விஷேச பணிகளை செய்து வருகின்றனர்.

புத்திரபாக்கியம், திருமண தடை விலகுவதாகவும், நவக்கிரக தோஷகிரக பாதிப்பு நீங்குவதாகவும் பக்தர்களால் நம்பப்படுகிறது.

தூய பசும்பால் மட்டுமே அபிஷேகம் செய்யப்படுகிறது. புதுப்பிக்கப்பட்டு கும்பாபி ஷேகம் கண்ட சித்தி புத்தி விநாயகர் கோவிலில் நாகர், நவக்கிரக சன்னதி உள்ளது.

வெளியூர் செல்லும் பக்தர்கள் தினமும் ஏராளமானோர் காலை, மதியம் அரசமரத்தை சுற்றி வலம் வந்து சித்தி புத்தி விநாயகரை தரிசித்து செல்கின்றனர்.










# மதுரையில் பிரசன்னமான திருப்பதி பெருமாள்

திருமலை நாயக்கர் திருப்பதி வேங்கடேசப் பெருமாள் மீது பக்தி கொண்டவர். திருப்பதியிலிருந்து மதுரைவரை மணி மண்டபங்களைக் கட்டினார் திருமலை மன்னர். தினமும் திருப்பதியில் பூஜை தொடங்கியதும் அங்கு அடிக்கப்படும் மணி ஓசையைக் கேட்டு வரிசையான மண்டபங்களின் ஒலி தொடர்ந்து ஒலித்துக் கடைசியாக மதுரை மன்னர் அரண்மனைக்கு அருகில் இருக்கும் மணி மண்டபத்தில் ஒலி ஒலிக்கும். அதைக் கேட்டதும் திருமலை மன்னன் வேங்கடவனை வணங்கிப் பின் உணவு உட்கொள்வது வழக்கம் என்று ஒரு சாரார் சொல்கின்றனர்.

சிலர் ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில் மணி ஓசை கேட்கும் ஏற்பாட்டைச் செய்திருந்தார் என்றும் சிலர் அழகர் கோயில் மணி ஓசை கேட்டபின்பே பெருமாளை வணங்கி உணவு உட்கொள்வார் என்றும் சொல்கிறார்கள். எப்படியானாலும் திருமலை மன்னர் பெருமாள்மீது பக்தி கொண்டவர் என்பதில் ஐயமில்லை.

ஒருநாள் உரிய நேரத்தில் மணி ஓசை கேட்காததால் தன் குதிரையை எடுத்துக்கொண்டு பெருமாள் மணி மண்டபத்தை நோக்கிப் புறப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் குதிரை நகர மறுத்தது. மிரண்டு திமிறியது. மன்னன் அந்த இடத்தை ஆராய்ந்த போது அங்கு ஓர் அனுமன் சிலை காணக்கிடைத்தது. அனுமனை வணங்கி நின்றபோது அங்கே திருப்பதி பெருமாள் அவருக்குக் காட்சி கொடுத்தார்.

இனி தன் தரிசனத்துக்காகத் தவிக்க வேண்டாம் என்று சொல்லி இங்கேயே ஓர் ஆலயத்தை எழுப்பினால் அதில் பிரசன்னமாகி அருள்பாலிப்பேன் என்று சொல்லி மறைந்தார் பெருமாள். இதைக் கேட்ட மன்னன் உடனடியாக அங்கே ஒரு பெருமாள் கோயிலை நிர்மாணிக்க உத்தரவிட்டார். அருகிலேயே சுயம்பு ஆஞ்சநேயரையும் பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்தார் என்கிறது தலவரலாறு.

கலை நயம் மிக்க இந்தத் திருக்கோயிலில் அருளும் மூலவர் திருநாமம், 'பிரசன்ன வேங்கடாசலபதி' என்பதாகும். துவாரபாலகர்களாக ஜயன் விஜயன் காட்சி கொடுக்க உள்ளே கருவறையில் வேங்கடாசலபதி நின்றகோலத்தில் பக்தர்களுக்குக் காட்சி அருள்கிறார். நேராக நின்று தரிசனம் செய்தால் பெருமாள் மட்டுமே காட்சிகொடுப்பார். அருகில் சென்றால் ஸ்ரீதேவி பூதேவித் தாயாரையும் தரிசனம் செய்து மகிழலாம். உற்சவருக்கு, ஸ்ரீநிவாசன் என்று பெயர். இங்குள்ள கிணற்று நீரே இக்கோயிலின் தீர்த்தமாக விளங்குகிறது. இந்த ஆலயத்தில் நாயக்கர் காலச் சிற்பங்களும் ஓவியங்களும் கண்ணுக்கு விருந்தாவதோடு கலைப்பொக்கிஷங்களாகவும் விளங்குகின்றன.

இங்கு கருவறையின் அருகிலேயே சுயம்பு ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார். இந்த ஆஞ்சநேயர் உக்கிர ஆஞ்சநேயர் என்கிறார்கள். ஒரே கல்லில் உருவான மூர்த்தி இவர். வாலில் மணியும் கையில் தாமரை மலரும் ஏந்தியும் மற்றொரு கரத்தில் அபய முத்திரையும் காட்டி அருள்கிறார் ஆஞ்சநேயர். இந்த அனுமன் உக்கிர மூர்த்தியாக அருள்வதால் இவரின் உக்கிரத்தைத் தணிக்கும் வண்ணம் எதிரே சங்கு சக்கரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தலத்தில் சித்ரா பௌர்ணமி திருவிழா, ஆனிப்பூரம், புரட்டாசி பிரம்மோற்சவம், வைகுண்ட ஏகாதசி, ராப்பத்து உற்சவம் உள்ளிட்டவை மிகவும் விசேஷமாக நடைபெறும். சித்ரா பௌர்ணமியை ஒட்டி அழகர்கோயிலிலிருந்து பல்லக்கில் புறப்படும் அழகர், பிரசன்ன வேங்கடாசலபதி பெருமாள் திருக்கோயிலில் எழுந்தருள்வார்.

இங்குதான் திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் சந்நிதியிலிருந்து வரும் மாலை அணிவிக்கப்பட்டு, அபிஷேக, ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆராதனைகளை ஏற்கும் அழகர் தங்கக் குதிரை வாகனத்தில் மறுநாள் காலையில் வைகை ஆற்றில் இறங்குவார். புரட்டாசி பிரம்மோற்சவமும் இந்த ஆலயத்தில் விசேஷமாக நடைபெறும். இங்கு பக்தர்கள் புரட்டாசி மாதம் விரதம் இருந்து வழிபாடுகள் செய்வார்கள்.

பிரசன்ன வேங்கடாசலபதிப் பெருமாளை வணங்கினால் திருப்பதி சென்று வணங்கிய பலன் கிடைக்கும். திருப்பதி சென்று நேர்த்திக்கடன் செலுத்த முடியாதவர்கள் இங்கு தங்கள் வேண்டுதல்களைச் செலுத்தலாம்.


ஸ்ரீகாமாட்சி அம்மன் துணை ஸ்ரீதொட்டிச்சி அம்மன் துணை ஸ்ரீபதினெட்டாம்படி கருப்பன் துணை
மூன்று தலைமுறை கண்ட கைராசியான ஸ்தாபனம்
பீனாஸ் பத்திர எழுத்தகம்
பத்திர எழுத்தர்

Prop.N.P.வேல்முருகன் B.Com
State Document Writer
செல்: 99526 39497
95851 88741






aanmeegamalar.com





# மதுரையை சுற்றி வரும் நவநீத பெருமாள்





முருகனின் முதல்படை வீடான திருப்பரங்குன்றம் கோவில் மிக அருகில் திருகூடல்மலையில் உள்ள ராமலிங்கம் விலாசத்தில் கட்டிக்குளம் சூட்டுகோல் மாயாண்டி சுவாமி, சோமப்பா சுவாமி போன்ற ஜீவசமாதி கோவிலில் சித்தர்கள் வழிபட்ட நவநீத பெருமாள் மற்றும் தண்டாயுதபாணி, ஆஞ்சநேயர் சன்னதிகள் உள்ளது.

இங்கிருந்து சித்தர்கள் ஒரேநேரத்தில் மீனாட்சி அம்மன் கோயில், அழகர் மலை, யானைமலையில் தவம் இருந்து தரிசித்து உள்ளனர்.


இங்கு உள்ள நவநீதபெருமாள் குதிரை வாகனத்தில் ஆடிபௌர்ணமி தினத்தில் புறப்பட்டு மதுரையைசுற்றியுள்ள ஊர்களில் பக்தர்களுக்கு வரம் தரவும் அருள் தரவும் புறப்பட்டு சுமார் 25 ஊர்களில் வலம் வந்து மீண்டும் கோவில் வந்தடைவார்.

சுவாமி புறப்பட்டு வர 25 நாட்கள் ஆகும். நவநீதபெருமாள் செல்லும் ஊர்களில் எல்லாம் பக்தர்கள் திரண்டு வணங்கி வரவேப்பு கொடுப்பார்கள்.

நவநீதபெருமாள் தங்கள் ஊர்களில் தங்கி அருள் ஆசி வழங்குவதை பெருமாள் நேரில் காட்சிஅளித்ததுபோல் பெரும் பாக்கியமாக கருதுகின்றனர்.

இதுதவிர வைகுண்ட ஏகாதசி அன்று நவநீத பெருமாள் தசாவதாரம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஆலய தகவல் பற்றி அறிய 9842124841 மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.

ஓம் காகபுஜண்டாய நமஹ சற்குருநாதர் துணை

## சூட்டுக்கோல் இராமலிங்க விலாசம்

2023ஆம் ஆண்டு சிறப்பு வழிபாடு நாட்கள் விபரம்



| வ. எண் | மாதம் | அமாவாசை | பௌர்ணமி பகல் | பௌர்ணமி இரவு | கார்த்திகை | பிரதோஷம் | பூசம் | சங்கடஹர சதுர்த்தி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ஜனவரி | 21 | 6 | 6 | 3, 30 | 4, 19 | 8 | 10 |
| 02 | பிப்ரவரி | 20 | 5 | 5 | 26 | 3, 18 | 4 | 9 |
| 03 | மார்ச் | 21 | 7 | 6 | 26 | 4, 19 | 3,31 | 11 |
| 04 | ஏப்ரல் | 19 | 5 | 5 | 22 | 3, 17 | 27 | 9 |
| 05 | மே | 19 | 5 | 5 | 19 | 3, 17 | 24 | 8 |
| 06 | ஜூன் | 17 | 3 | 3 | 16 | 1, 15 | 21 | 7 |
| 07 | ஜூலை | 17 | 3 | 2 | 13 | 1,15,30 | 18 | 6 |
| 08 | ஆகஸ்டு | 16 | 1,30 | 1,30 | 9 | 13, 28 | 14 | 4 |
| 09 | செப்டம்பர் | 14 | 29 | 28 | 6 | 12, 27 | 11 | 3 |
| 10 | அக்டோபர் | 14 | 28 | 28 | 3, 30 | 12, 26 | 8 | 2 |
| 11 | நவம்பர் | 13 | 27 | 26 | 26 | 10, 24 | 4 | 1, 30 |
| 12 | டிசம்பர் | 12 | 26 | 26 | 24 | 10, 24 | 1,29 | 30 |

அருள்மிகு கட்டிக்குளம் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் 93வது ஆண்டு குருபூசை விழா
நாள்: 19.10.2023 வியாழக்கிழமை

அருள்மிகு சோமப்பா சுவாமிகள் 55வது குருபூசை
நாள்: 18.06.2023 ஞாயிற்றுக்கிழமை

பசுமடம்
சூட்டுக்கோல் இராமலிங்க விலாசத்தில் பசுமடம் அமைத்து பசுக்கள் பராமரிக்கப்படுகின்றன.



### மாயாண்டி பஞ்சகவ்ய விளக்கு

பசுவின் கோமியம், பசுவின் சாணம், பால், தயிர், நெய் மற்றும் 108 வகையான ஹோமப் பொருட்களால் தயாரிக்கப்பட்டது.

100% இயற்கையானது | 100% Organic

தொடர்புக்கு: செல்: 94885 52221

# மருமகனுக்கு மாமனார் கட்டிக்கொடுத்த

# ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம்

ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் 108 திவ்ய தேசங்களில் 90 வது திவ்ய தேசம் ஆகும். இத்தலத்தில் மூலவர் வடபத்ரசாயி சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார்.


இத்தலத்தில் மட்டுமே ஆண்டாள், ரங்கமன்னார், கருடாழ்வார் ஆகிய மூவரும் ஒரே ஸ்தானத்தில் காட்சியளிக் கிறார்கள். உற்சவர் பெருமாள் பேண்ட், சட்டை அணிந்தும், முக்கிய விழாக்காலங்களில் வெள்ளை வேஷ்டி அணிந்தும் அருள்பாலிக்கிறார்.

திருப்பதி பெருமாளுக்கு புரட்டாசி 3 வது சனிக்கிழமை பிரம்மோற்சவத்துக்கு ஆண்டாளுக்கு சூட்டிய மாலை அணிவிக்கப்படுகிறது.

இங்கு ஆண்டாள் திருக்கல்யாணத்துக்கு திருப்பதி வெங்கடாஜலபதி கோவிலிலிருந்து திருமணப் பட்டுப் புடவை வருகிறது. மதுரையில் சித்திரைத் திருவிழா அழகர் எதிர் சேவையின் போது ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலை கள்ளழகர் அணிகிறார். இத்தலத்தில் பிறந்த பெரியாழ்வார், கருடாழ்வாரின் அம்சமாக பிறந்ததாக ஐதீகம். தன் மகளை, திருமாலுக்கு திருமணம் செய்து கொடுத்த போது, மாப்பிள்ளைக்கு அருகில் நின்று கொண்டாராம். இதன் அடிப்படையில் இத்தலத்தில் சுவாமிக்கு அருகில் கருடாழ்வார் இருக்கிறார்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஆண்டாள், தான் அணிந் திருக்கும் மாலையில் 108 திவ்யதேசங்களில் அருளும் பெருமாள்களை மாலையாக அணிந் திருப்பதாக ஐதீகம். ஆண்டாள் கோயில் கருவறையைச் சுற்றி முதல் பிரகார சுவர்களில் 108 திவ்யதேச பெருமாளின் உருவங்கள் ஓவியமாக வரையப் பட்டுள்ளது.

இந்த ஓவியத்தில் திருப்பாற்கடல், வைகுண்டம் பெருமாள் உட்பட அனைத்து பெருமாளையும் தரிசிக்கலாம்.ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள், பெரியாழ்வார், வடபத்ரசாய் ஆகிய மூன்று பேர் அவதரித்த தலம் என்பதால் "முப்புரிஊட்டியதலம்" என அழைக்கப்படுகிறது.



ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து பெருமாளை வேண்டி திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய பிரபந்தங்களை பாடினாள். இதில் திருப்பாவை 30 பாசுரங்களும், நாச்சியார்திருமொழி 143 பாசுரங்களும் கொண்டுள்ளது.ஸ்ரீனிவாசபெருமாளுக்கு திருப்பாவை என்ற பாசுரத்தால் பாமாலை பாடியபூமாலை சூடிக்கொடுத்ததால் "சூடிக்கொடுத்த நாச்சியார்" என்ற பெயரும் உண்டு.

பெரியாழ்வார், நாச்சியார் பிறந்த இடம். பெரியாழ்வார் பெருமாளுக்கு பல்லாண்டு பாடிய திருத்தலம். தமிழ்நாடு அரசு சின்னத்தில் போடப்பட்டுள்ள கோபுரம் இக்கோவிலின் கோபுரம் என்பது கூடுதல் சிறப்பு. இக்கோவிலின் ராஜ கோபுரத்தை கட்டியவர் பெரியாழ்வார்.ஆண்டாளை எடுத்து வளர்த்த தந்தையாகிய இவர், தனது மருமகனாகிய பெருமாளுக்கு இக்கோபுரத்தைக் கட்டினார் என்று கூறுவர். அவர் பாண்டிய மன்னன் வல்லபதேவனின் அரண்மனையில் நடைபெற்ற விவாதங்களில் வெற்றி கொண்டு, தாம் பெற்ற பொன் முடிப்பைக் கொண்டு இதைக் கட்டி முடித்தார் என்றும் நம்பப்படுகிறது.

11 நிலைகள், 11 கலசங்களுடன் இருக்கும் இக்கோபுரத்தின் உயரம் 196 அடி. பெரியாழ்வார் காலத்தில் ஒரு ரூபாய்க்கு 196 காசுகள் மதிப்பிருந்ததாம்.

இதன் அடிப்படையில் அவர், இந்த உயரத்தில் கோபுரம் கட்டி யதாக சொல்கி றார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ பெரியாழ்வார் இக்கோபுரத் தை கட்டிய போது சிற்பங்கள் எதுவும் அமைக்க வில்லை.

சிலைகள் இல்லாமல், தமிழர்களின் கட்டடக் கலையை எடுத்துக்காட்டும் விதமாக இருந்ததும், இக்கோபுரம் தமிழக அரசின் சின்னமாக இடம் பிடிக்க ஒரு காரணமாக அமைந்தது.

akkarai
Responsible Snacking
LET'S திண்ணை THINNAI
Relax & Recharge
The ICECREAM VAN
Homely IceCream
Estd. 2018
Opp. Silaiman Police Station
Madurai 625201
8.00 am - 9.30 pm All Days
INDIANFOODS Biscuit Factory
Thattankulam Thiruppuvanam 630611
7.00 am - 9.30 pm All Days
www.indianfoods.in

# நோய்களை தீர்க்கும் நூபுர கங்கை தீர்த்தம்



அழகர்மலை உச்சியில் உள்ள நூபுர கங்கையை சுமார் 3 மணி தூரம் நடந்து செ ன்றால் அந்த அபூர்வ அதிசய கங்கை தீர்த்தத்தை காணலாம். இந்த தீர்த்தம் திருமாலுடைய திருவடி சிலம்பில் இருந்து உற்பத்தியாகி பெருகி வழியும் தனி பெருமையுடையது. மகாபலிசக்கரவர்த்தியிடம் வாமன அவதாரம் எடுத்த பெருமாள் மூன்றடி மண் கேட்டார். அவரும் தந்தேன் என்றார். உடனே வாமனர் விசுவரூபம் எடுத்து மூன்று உலகங்களையும் தனது திருவடிகளால் அளந்தார், மூன்றாவது அடி இடத்தை எங்கே அளந்துகொள்வது என்று வாமனரை பார்த்து பெருமாள் வினவினார்.

அதற்கு தனது சிரத்தை வாமனர் காட்டினார். தனது திருப்பாதத்தை வைத்து வாமனரை அதல பாதாளத்

தில் அமிழ்த்தி விட்டார். பெருமாள். இந்த பிரமாண்ட மான அவதாரத்திற்கு திருவிக்கிரம அவதாரம் என்று பெயர். இதில் பெருமாள் முதலடியை மண்ணில் வைத்துவிட்டு இரண்டாவது அடியை விண்ணில் வைக்க தனது திருப்பாதத்தை ஆகாயத்தில் உயர்த்திய போது அங்கிருந்த பிரம்மா, தனது தந்தையின் பாதம் என்பதை அறிந்து தனது கமண்டல நீரினால் பூஜை செய்தார்.

அப்போது பகவானின் பாதங்களிலிருந்து பொற்சிலம்பு அசைந்து அதிலிருந்த நீர்துளிகள் அழகர்மலை மீது விழ அதுவே சிலம்பாறாக பெருக்கெடுத்து இன்று ஓடி வருகிறது. இரும்பு சத்து.

தாமிரசத்து, மூலிகைசத்து உள்ளிட்ட பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்த அபூர்வ தீர்த்தம் இது ஆகும்.






# மனகுறைகளை போக்கும் மடப்புரம் விலக்கு விசாலாட்சி விநாயகர்

விநாயக விரதங்களுள் சங்கரஹர சதுர்த்தி விரதம் தனி மகத்துவம் கொண்டது. ஒவ்வொரு மாதமும் பவுர்ணமியை அடுத்த நான்காம் நாள் தேய்பிறையில் வரும் சதுர்த்தி நாளை சங்கரஹர சதுர்த்தி திருநாள் என்பர். சங்கரஹர சதுர்த்தி விசேஷமாக அனுசரிக்கப்படும் பிள்ளையார் கோவில்களுக்கும் சென்று பிள்ளையாரை தரிசித்து நலம் பெறலாம். இப்படி சங்கரஹர சதுர்த்தி வழிபாடுகள் வெகு சிறப்பாக நடைபெறும் ஆலயங்களுள் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மடப்புரம் விலக்கில் அருள்பாலிக்கும் திசை மாறிய விசாலாட்சி விநாயகர் ஆலயம் குறிப்பிடத்தக்கதாகும்.பொதுவாக திசை மாறிய தெய்வங்களுக்கு அருள் பாலிக்கும் திறன் அதிகம் என்பார்கள். கிழக்கு நோக்கியே எல்லா விநாயகர்களும் இருப்பார்கள். ஆனால் இத்தலத்தில் விநாயகர் திசை மாறி தெற்கு முகமாய் அருள் பாலித்து வருகிறார்.

விசலாட்சி விநாயகர் எனும் பெயரோடு திகழும் இந்த பிள்ளையார் பெருமான் திருக்கோவிலுக்கு மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்தும், மடப்புரம் காளியம்மன் கோவில் செல்லும் நகர பேருந்துகளில் சென்றால் மடப்புரம் விலக்கு தெற்குமுக விசாலாட்சி விநாயகர் கோவில் வாசலிலேயே இறங்கி கொள்ளலாம். இங்கு விசாலாட்சி ஜோதிட மந்திராலயமும் செயல்பட்டு வருகிறது. பார்க்க எளிமையாயினும் அருள் பொங்கும் அற்புத ஆலயமாக திகழ்கிறது. இந்த விசாலாட்சி விநாயகர் ஆலய கருவறையில் பாசம், அங்குசம், மோதகம், அபய முத்திரை தாங்கிய நான்கு திருக்கரங்களோடு உள்ளது. ஆலய தரிசன தொடர்புக்கு 94431 65504




ON LINE
ஜோதிடம்
★ பணம் தரும், கடன் தீர்க்கும் குபேர ஜாதகம் ரூ. 501
★ வசிய மூலிகை ரூ. 501 ★ வசிய யந்திரம் ரூ. 1001
★ தொழில் யந்திரம் ரூ. 1001 ★ ஏவல் யந்திரம் ரூ. 1001
★ கல்வி யந்திரம் ரூ. 1001 ★ திருமண யந்திரம் ரூ. 1001
★ நோய் தீர்க்கும் தன்வந்திரி யந்திரம் ரூ. 1001
உலகப்புகழ் "மாலைமுரசு" ஜோதிடர், பட்டிமன்ற நடுவர்
கரு.கருப்பையா
B.Sc., M.A., M.Phil., B.Ed., S.M.P.,
விசாலாட்சி ஜோதிட மந்த்ராலயம்
மடப்புரம் விலக்கு (ஆர்ச் எதிரில்)
விசாலாட்சி நகர்,
திருப்புவனம் - 630 611 (வழி) மதுரை
94431 65504, 95247 51504
YouTube
Jothidar Karukaruppiah
Karu Karu Siddha
Karu Karu Vishal
herbal mix karukaruppiah
தங்க நிற குபேர வசிய டாலர் ரூ. 501



இடை காடார் சித்தர் பௌர்ணமி அன்னதான குழு இடைக்காட்டூர்

நவகிரகங்களைதிசை மாற்றி வைத்த நவகிரக நாயகன் மகான் இடை காடார் சித்தர் ஆலயத்தில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் காலை 10 மணிக்கு உலக மக்கள் யாவரும் நலமாக வாழ ஹோம பூஜையும் அதனை தொடர்ந்து அபிஷேகம் மற்றும் அன்னதானமும் சிறப்பாக நடைபெறும், பக்தர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு நவகிரக தோசம் திரு மணதடை கல்வி குழந்தை யின்மை ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.
பௌர்ணமி விழாவில் நீங்களும் பங்கேற்க
97515559851 /9751936853
– இப்படிக்கு
இடை காடார் சித்தர் பௌர்ணமி
அன்னதான குழு இடைக்காட்டூர்


aanmeegamalar.com

# பஞ்சம் போக்கி மக்களின் இடர்தீர்த்த
# இடைக்காடர் சித்தர் கோவில்

பதினெட்டு சித்தர்களில் ஒருவரான மகான் இடைக்காடர் சித்தர் 32 அறப்பணிகள் செய்து பல்வேறு அற்புதங்களை நிகழ்த்தி சிவனை வழிபட்டு திருவண்ணாமலையில் ஜோதியாக மறைந்து திருவண்ணாமலை வரும் சிவ பக்தர்களுக்கு இன்றும் அருள் ஆசி வழங்குகிறார். இடைக்காடர் சித்தர்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராமேசுவரம் நெடுஞ்சாலையில் வைகை ஆற்றங்கரையில் உள்ளது இடைக்காட்டூர். இங்கு 2ஆம் நூற்றாண்டில் இடைக்காடர் தங்கி வாழ்ந்துள்ளார்.

அந்த சமயம், நவக்கிரகங்களின் தாக்கத்தின் காரணமாக தொடர்ந்து 12 வருடங்கள் பூலோகம் கடும் பஞ்சத்தில் இருக்கும் என்பதை அறிந்த இடைக்காடார், அந்த பஞ்சகாலத்தில் எப்படி வாழ்வது என்பதை முன்கூட்டியே சிந்திதார். இந்தக் காலகதியை வெல்ல ஒரு வழியையும் கண்டறிந்து வைத்திருந்தார்.



தன் குடிசையைப் புதுப்பிக்கும் போது, மண் சுவரோடு நெல்லைக் கலந்துவிட்டார். வீட்டைச் சுற்றிலும் நீரில்லா விட்டாலும் வளரும் எருக்கஞ் செடிகளைப் பயிரிட்டு அதை ஆடுகளுக்குத் தின்னக் கொடுத்துப் பழக்கிவிட்டார்.

இதனால், வறட்சி வந்து பூமண்டலமே கதறிய போதும் இடைக்காடரோ அவரது ஆடுகளோ துன்புறவில்லை. எருக்கந்தழையைத் தின்னும் ஆடுகளுக்கு நமைச்சல் ஏற்படும். உடனே மண்குடிசை சுவரில் சென்று உரசும். மண்ணோடு கலந்திருந்த நெல் இதனால் உமி நீங்கி அரிசியாகக் கீழ் விழும்.

இடைக்காடர் போகியல்ல, யோகி. அவருக்கு ஒரு கைப்பிடி அரிசி ஒருநாளைக்குப் போதும். அதைக் கொண்டு கஞ்சிகாய்ச்சிக் குடித்தார். ஆடுகளும் அவரும் அந்த வறண்ட காலத்திலும் அழகாக தப்பிக் கொண்டே இருந்தனர்.

நவக்கிரகங்கள் கொடுத்த தாக்கத்தில் பூமியே திண்டாடும் போது, இடைக்காடாரும், அவரின் ஆடுகளும், எந்த பஞ்சமும் இன்றி வாழ்ந்ததை அறிந்த நவகிரகங்கள், இதற்கான காரணத்தை அறிய முற்பட்டது.

மாற்று உருவம் ஏற்படுத்தி நவக்கிரகங்கள் இடைக்காடாரின் குடிசைக்குள் நுழைந் தனர். வந்திருப்பவை கோள்கள் தான் என்பதைத் தனது சித்தஞானத்தால் உணர்ந்து கொண்டார் இடைக்கடார்.

விருந்தாளிகளுக்கு உணவு படைப்பதுமரபு என்பதற்கினங்க உணவு தயாரிப்பு பணியை துவங்கினார், மாறுவேடத்தில் வந்த நவ கிரகங்கள் நடப்பவற்றை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தது.

முதல் காரியமாக ஆடுகளுக்கு எருக்கிலையை தின்னக் கொடுத்தார். இலையை உண்ட ஆடுகள் அரிப்பெடுத்து சுவர்களில் உரச, நெல்லின் கூடுகள் உடைபட்டு உமியும் அரிசியும் பிரிந்து விழுந்தன. அதை எடுத்து கஞ்சி காய்ச்சியவர், நவகிரகங்களுக்கு அதை வழங் கினார்.

அவர் செயலைப் பார்த்து கோள்கள் சற்று கூசிப் போயின. வறுமை, இல்லாமை போன்ற நிலையிலும் இடைக்காடரின் விருந்தோம்பும் பண்பு, அவர்கள் மனதில் அவர்பால் இருந்த எதிர்மறையான எண் ணங்களை அப்படியே மறையச் செய்தது.

உணவை உண்ட நவகிரகங்கள் உண்ட களைப்பில் ஓய்வெடுக்க ஆரம்பித்தனர். நவகிரகங்கள் அனை வரும் ஒரே திசையில் இருந்தால் எப்போதும் பஞ்சம் நிலவிவிடும் என இடைக்காடர் சித்தர் நவகிரகங்களை திசைதிருப்பி வைத்தார்.

பிறர் வாழ நினைக்கும் சன்யாசிகள் மனது வைத்தால் அவர்கள் வாழும் நாட்களை மட்டுமல்ல, கோள்களையும் மாற்றும் வல்லமை அவர்களுக்கு உண்டு என்பதை, இதோ கொட்டும் மழையைக் கொண்டு உலகுக்கு உணர்த்தி விட்டேன். கோள்களால், கர்ம வினைகளுக்கு உட்பட்டவர்களையே ஆட்டிப்படைக்க முடியும். அதை வென்று வாழ முற்படுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது என்பதை, இனிவரும் காலம் உணரட்டும்." என்று கூறினார்.

இடைக்காடாரின் செயலைப் பார்த்து நவகிரகங்களும், பஞ்சம் ஏற்படுத்தி மக்களை வதைத்ததை எண்ணி வருந்தி, இடைக்காடாருக்கு ஆசி வழங்கிச் சென்றனர்.

இன்றைக்கும் இடைக்காடர் சித்தர் எழுதிய பஞ்சாங்கம் நாடு முழுவதும் பார்க்கப்படுகிறது. பல்வேறு தோஷ நிவர்த்தி தலமாக இந்த இடைக்காடர் சித்தர் கோவில் உள்ளது.

இங்கு இடைக்காடருக்கு ஐம்பொன் சிலையும் இது தவிர விநாயகர், முருகன், நவகிரகங்கள் சன்னதியும் உள்ளது. இங்கு ஆண்டு தோறும் புரட்டாசி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இடைக்காடர் ஜெயந்தி விழாவும் குரு பெயர்ச்சி, சனிபெயர்ச்சி, ராகு கேது பெயர்ச்சி விழாவும் நடக்கிறது.

பௌர்ணமி அன்று விஷேச பூஜை வழிபாடும் நடைபெறுகிறது. அனைத்து தோஷம் நீங்க இடைக்காடர் சித்தர் நவகிரக கோவில் உள்ளது. இடைக்காடர் சித்தரால் திசை மாறிவைத்து பிரதிஷ்டை செய்யப்பட்ட நவகிரகங்களை ஏராளமானோர் வழிபட்டு செல்கின்றனர்.

இடைக்காடர் சித்தரால் நவகிரகங்கள் அமிர்தம் பெற்ற பூலோக அமிர்தலோகமாக இடைக்காட்டூர் உள்ளது. இந்தியாவிலேயே நவகிரகங் களுக்கும் தனிக்கோவிலாக இடைக்காட்டூர் சித்தர் கோவில் உள்ளது.

# மாமன் மருமகன்
# ஒரே இடத்தில் காட்சிதரும் ஸ்தலம்

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் முதலாவதும் ஆறாவதும் மதுரையில் அமைந்துள்ளது. இதில் ஆறு படை வீடான பழமுதிர்ச்சோலை இருப்பது, அழகர்மலையின் உச்சியில்தான். அறுபடை வீடுகளில் திருவிளையாடல் புரிந்த முருகப்பெருமான், அவ்வையாரின் அகங்காரத்தை போக்கிய தலம் இத்தலம் என புராணக்கதைகள் கூறுகின்றன.



காட்டு வழியாக நடந்து சென்ற அவ்வையாருக்கு நாவல் மரத்தின் கிளையில் ஆடுமேய்க்கும் சிறுவனாக அமர்ந்திருந்த முருகப்பெருமாள், சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா? என கேட்டு அகந்தையை போக்கியதாககூறப்படுகிறது.

இந்த திருவிளையாடல் நினைவாக சோலை மலை உச்சில் நாவல் மரத்தின் கிளை இன்றும் காணப்படுகிறது.


வள்ளியை திருமணம் செய்ய விநாயகரை யானையாக வந்து உதவும்படி முருகன் அழைத்த தலம் பழமுதிர்ச்சோலை என்றும் கூறப்படுகிறது. பழம் முற்றிய சோலை இது என திருமுருகாற்றுப் படையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இங்குள்ள முருகனுக்கு உகந்த நாளாக வெள்ளிக் கிழமை கருதப்படு கிறது.

அன்றைய தினம் முருக கடவுக்கு தேனும், தினை மாவும் படைக்கப்படுகிறது.

இங்கு கந்த சஷ்டி விழா, தைப்பூசம், வைகாசி விசாகம், கிருத்திகை ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

மாமன் அருகில் மருமகன் முருகருக்கும் அருகே இருக்கும் ஸ்தலங்கள் மதுரை அழகர் மலையாகும்.

இடதுகையால் வா என்றழைத்து வலதுகையால்
அருள்பாலிக்கும் ஸ்ரீ பூமிநீளா சமேத ஸ்ரீ சுந்தரராஜபெருமாள்
அருள்பெற அனைவரும் வருக! வருக!!

திருக்கோவில் வருஷாபிஷேகம் 1.7.2023


இறைபணியில்...
ஸ்ரீ பூமி நீளா பெருமாள்
கோவில் நிர்வாக கமிட்டி'
வேம்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
செல்: 9791583169

மானாமதுரை சித்திரை
திருவிழாவிற்கு
வருகை தரும்
பக்தர்களை
வருக!
வருக!!






ஜோதிடர்
M.K.கதிரேசன்



செல்
9443105653
9487404922

ஜனனி மெடிக்கல்ஸ்,
66/1 தெற்குரதவீதி
மானாமதுரை



# திருப்பதி ஏழு மலையின் சிறப்புகள்

### 1. வேங்கட மலை:

'வேம்' என்றால் பாவம், 'கட' என்றால் 'நாசமடைதல்'. பாவங்களைப் போக்கும் மலை என்பதால் இதற்கு 'வேங்கட மலை' என்று பெயர். இம்மலையில் வெங்கடாசலபதியாக (ஸ்ரீநிவாஸன்) மகாவிஷ்ணு காட்சி தருகிறார்.

### 2. சேஷ மலை:

பெருமாளின் அவதாரத்திற்காக ஆதிசேஷன் மலையாக வந்தார். இது ஆதிசேஷன் பெயரால் 'சேஷமலை' என்று அழைக்கப்படுகிறது.

### 3. வேதமலை:

வேதங்கள் இங்கு மலை வடிவில் தங்கி எம்பெருமானை பூஜித்தன. எனவே இது 'வேத மலை' எனப்பட்டது.

### 4. கருட மலை:

இங்கு சுவாமியை வணங்க வந்த கருடாழ்வார் வைகுண்டத்திலிருந்து ஏழுமலையை எடுத்து வந்தார். அதனால் இது 'கருட மலை' எனப் பெயர் பெற்றது.

### 5. விருஷப மலை:

விருஷபன் என்ற அசுரன், இங்கு சுவாமியை வணங்கி மோட்சம் பெற்றான். அவனது பெயரில் இது 'விருஷப மலை' எனப் பெயர் பெற்றது.

### 6. அஞ்சன மலை:

ஆஞ்சநேயரின் தாய் அஞ்சனை. தனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஆதிவராகரை வேண்டி தவமிருந்தாள். அதன் பயனாக ஆஞ்சநேயரைப் பெற்றாள். இவளது பெயரில் ஏற்பட்ட மலை 'அஞ்சன மலை' எனப்படுகிறது.

### 7. ஆனந்த மலை:

ஆதிசேஷன், வாயு பகவானுக்கிடையே போட்டி ஏற்பட்ட போது, மகாவிஷ்ணு நடுவராக இருந்தார். இருவரும் பலத்தில் சமமானவர்கள் என்று தீர்ப்பளித்தார். இதனால் வாயுவும் ஆதிசேஷனும் ஆனந்தம் அடைந்தனர். இதன் காரணமாக இது 'ஆனந்த மலை' என்று பெயர் பெற்றது.














# வரம் தரும் வீர அழகர்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வீர அழகர் கோவில் உள்ளது.

வைகை ஆற்று தென்கிழக்கில் உள்ள இக்கோவிலில் ஸ்ரீசுந்தரராஜபெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இங்கு ராமபிரானால் மகுடம் சூட்டப்பட்ட வீர ஆஞ்சநேயர், தாயார்சன்னதியும் உள்ளது.

கோபுரம் முன்பு பதினெட்டுபடி கருப்பன், ராக்கச்சி அம்மன் தனிகோவில் உள்ளது. வீரஅழகர் ஆற்றில்

இறங்குவதற்கு முன்பு பூபல்லாக்கில் கள்ள மழகர் திருக்கோலத்துடன் சென்று இறங்கும் முன்பு அலங்கார பிரியரான சுந்தரராஜ பெருமாளுக்கு தியாக விநோத பெருமாள் கோவிலில் சிறப்பு அலங்காரம் செய்யப்படும்.

வெள்ளை குதிரை வாகனத்தை அலங் கரித்து வீர அழகருக்கு வெண் மஞ்சள் பட்டு உடுத்திபச்சை வஸ்திரம் சாத்தி வேல் கம்புடன் கம்பீரமாக எழுந்தருளி வைகை ஆற்றில் இறங்குவார். ஆண்டுதோறும் நல்ல மழை பெய்து நல்ல விளைச் சலை தருவதற்கும் மக்களின் வாழ்வு மங்களகரமாக இருக்கும் வகையில் வீரஅழகர் வெண் மஞ்சள் பட்டு பச்சை வஸ்திரம் உடுத்தி வீதி உலா வந்து வெற்றி தரும் வீரஅழகர் வைகை ஆற்றில் இறங்குகிறார் என பக்தர்களால் நம்பப்பட்டு வருகிறது.

வைகை ஆற்று கரையில் இருபுறங்களிலும் ஸ்ரீஆனந்தவல்லி சோமநாத சுவாமி கோவில் வீரஅழகர் கோவில், அப்பன் பெருமாள் கோவில் இங்கு மட்டும் உள்ளது. மானாமதுரையில் ஆண்டு தோறும் நடைபெறும் பெரிய திருவிழாவாக சித்திரை திருவிழா மட்டுமே உள்ளது. ஆற்றில் இறங்கிய மறுநாள் இரவு மீண்டும் ஆற்றுக்குள் நிலாசோறு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் வீர அழகரை தரிசித்து வீட்டில் இருந்து சமைத்து எடுத்து வரபட்ட உணவு வகைகளை பக்தர்கள் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக பௌர்ணமி நிலவு ஒளியில் சாப்பிடுவார்கள். தமிழகத்தில் இங்கு மட்டும் வீர அழகருடன் பக்தர்கள் உணவு அருந்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.




மக்களின் பேரதரவுடன் சரித்திரம் வாய்ந்த
சிவகங்கையில் மீண்டும் புதுபொழிவுடன்
ஞாயிற்றுக்கிழமை வாரம் ஒருமுறை
இப்போது சிவகங்கை சிவன் கோவில் அருகில்
நிரஞ்சன் தோல் கிளினிக்

என்றென்றும் மருத்துவ சேவையில்
மக்களின் மருத்துவர்
Dr.அமலா ராஜமுருகன் MD.(DVL)
தோல்நோய் மற்றும் அழகியல்
சிகிச்சை நிபுணர், உதவி பேராசிரியர்,
மருத்துவ கல்லூரி

அளிக்கப்படும் சிகிச்சை விபரம்

தோல் சம்மந்தமான நோய்கள்
- தீராத நீண்ட நாள்பட்ட சொறி, சிரங்கு, புண், தோல் அரிப்பு, கரப்பான்.
- அனைத்து வகையான படர் தாமரை மற்றும் வெண்தேமல்.
- முகப்பருக்களுக்கு மற்றும் சோரியாசிஸ் நோய்க்கு சிறப்பான சிகிச்சை.
- சூரிய ஒளியினால் தோலில் உண்டாகும் வியாதிகள் (Photo damaged Skin).
- வெண்குஷ்டம் மற்றும் வெண்புள்ளி கண்டறிந்து சிறப்பான சிகிச்சை.
- சர்க்கரை வியாதி சம்பந்தமான தோல் வியாதிகள்.
- கால்களில் பித்த வெடிப்புகள் மற்றும் சத்து குறைபாடுகளால் ஏற்படும் தோல் நோய்கள்.
- கால் ஆணி, கால் சதை (Callosity) தடிப்பு உயர்தர சிகிச்சை.

அழகு சம்மந்தமான சிகிச்சைகள் விபரம்
- அனைத்து வகையான தழும்புகள் சரிசெய்தல் (முகப்பரு, வெட்டுக்காயம், ஆப்ரேசன் தழும்பு).
- கை மற்றும் கால்களில் உள்ள மரு மற்றும் ஆணி கால்களுக்கு ஐஸ் சிகிச்சை (Cryosurgery).
- ஆண், பெண் இருபாலருக்கும் முகத்தில் உள்ள மங்கு அகற்றுதல் (Chemical Peeling).
- முகம் மற்றும் உடம்பில் உள்ள மரு மற்றும் கரும்புள்ளிகளை அகற்றுதல் (Electro Surgery).
- முகப்பரு தழும்பு, முடி வளர்ச்சி, நாள்பட்ட புண் ஆகியவற்றிக்கு சிகிச்சை (PRP) மூலம் நிவாரணம்.

தலைமுடி சம்மந்தமான நோய்கள்
- நீண்ட நாள்பட்ட பொடுகு, பேன் தொல்லை, தலைமுடி உதிர்தல், ஆண், பெண் இருபாலருக்கும் சிறப்பான சிகிச்சை.
- தலைமுடி வழுக்கை, ஆண், பெண் (Androgenic alopecia).
- பூச்சி வெட்டு (Alopecia areata) மற்றும் இளநரை (Premature Canities).
- தலையில் சோரியாசிஸ் போன்ற வியாதிகள்.

நகம் சம்மந்தமான நோய்கள்
- நகச்சொத்தை & நகம் உள்நோக்கி வளர்தல், பாக்டீரியா மற்றும் பூஞ்சைகளால் ஏற்படும் பல்வேறு நோய்கள்.
- அனைத்து வகையான பால்வினை சம்பந்தப்பட்ட நோய்கள்.

பார்வை நேரம்: ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
(வாரம் ஒருமுறை)

அன்பையும் ஆதரவையும் என்றென்றும் நாடும்
நிரஞ்சன் தோல் கிளினிக்
சிவன் கோவில் தெற்கு தெரு,
அழகப்பா பல்கலைக் கழகம், (மேல்மாடி) சிவகங்கை.
தொடர்பு அலைபேசி : 95853 36998

# அற்புதமான, கலைநயமிக்க கருங்கல் கோவில்களை கட்டும்: ஸ்தபதி சண்முகம்







தமிழகத்தில் கலாச்சாரத்தில் கோவில்களுக்கு முக்கிய பங்குண்டு. சிற்பகலைகளை பறைசாற்றும்கோவில்கள் அனைத்தும்மன்னர்கள்கட்டியதாகத் தான் இருக்கும் அக்கோவில்கள் பெரும்பாலும் முழுமையாக கற்களினால் உருவாக்கப்பட்டதாகஇருக்கிறது. அத்தகைய கோவில் களில் சிற்பிகளால் தங்கள் முழு திறமையையும் காட்ட முடியும். ஆனால் இந்த காலத்தில் அப்படிபட்ட கோவில்கள் உருவாக்கப் படுவதில்லை. அந்த அளவுக்கு தற்காலத்தில் கலைஞர் களும் அதிகம் இல்லை. ஆனால் அந்த கற்கோவில் கலைஞர்கள் இன்னும் ஒரிருவர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சண்முகம் ஸ்தபதி. சிவ கங்கை மாவட்டம் மானாமதுரையில் வசிக்கும் பரமக்குடி தெளிச்சாத்தநல்லூர் கிராமத்தை சேர்ந்தவர்.

இவர் கல்லிலேயே கோவில் அமைப்பதில் பிரசித்தி பெற்றவர். இவர் சென்னை வள்ளுவர் கோட்டம், கன்னியா குமாரி விவேகானந்தர் மண்டபம் செய்த ஸ்தபதிஎஸ்.கே. ஆச்சாரியாரிடம் 22 வருடம் உதவி சிற்பியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர கர்நாடக மாநிலத்தில் புகழ் பெற்ற பலகோவில் திருப்பணிவேலைகளில் பங்கு பெற்று, அழகிய கோவில்களை கட்டும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இவர் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கலை அம்சத்தோடு கோவில்களை கட்டி வருகிறார். குறிச்சி காசி விஸ்வநாதர் கோவில், வேலூர் அழகு நாச்சியம்மன் கோவில், இடைகாட்டூர் பாலமுருகன் கோவில் என இது வரை 500க்கும் மேற்பட்ட கோவில் பணிகளை முடித்துள்ளார். பத்துஆண்டுகளுக்கு முன்பு மானாமதுரை வேதியரேந்தல் விலக்கில் அமைந்துள்ள ஸ்ரீ மகா பஞ்சமுக பிரித்தியங்கிரா தேவி கோவில் முழுவதுமே கருங்கல்லாலே திருப்பணி வேலையை செய்து உள்ளார்.

இந்த கோவில் இவரது சிற்பகலைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இந்த கோவில் வளாகத்தில் கொடிமர கணபதி சொர்ணாஹா பைரவர், லட்சுமி கணபதி, பலிபீடம் போன்றவை முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. இது தவிர தற்போது சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை மாவட்டங்களில் புதிய வடிவில் கோவில் அமைத்து வருகிறார். பல கிராமங்களில் நின்றுபோய் உள்ள கோவில் திருப்பணிகளை கண்டு அறிந்து சிற்பசாஸ்திர குறைபாடுகளை களைந்து திருப்பணிகளையும் செய்துள்ளார். ராஜகலைஞன் சிற்ப கலாரத்னா, மில்லியன் கோல்ட் கௌரவ டாக்டர் பட்டமும் பாராட்டு பெற்று உள்ளார்.

தெளிச்சாத்தநல்லூர் சண்முகம் ஸ்தபதி கூறும் போது "கோவில் கட்டி திருப்பணி செய்தால் கோடிபலன் கிடைக்கும். புல்லினால் கோவில் அமைத்தால் கோடி பலனும், புதுமண்ணால் அமைத்தால் 100 கோடி பலனும், துல்லிய தூய செங்கலினால் அமைத்தால் தூய 300 கோடி பலனும் கிடைக்கும். ஆனால் கருங்கல்லினால் அமைத்தால் கையில் வைகுண்டம் என்ற அளவுக்கு புண்ணியம் கிடைக்கும். அந்த அளவுக்கு கல்லில் அமைக்கப்படும் கோவிலுக்கு சிறப்பு உண்டு. என தெரிவித்தார்.

கலைநயத்தோடு கருங்கல் கோவில் திருபணிவேலைகளை செய்யும் ஸ்தபதி சண்முகத்தை தஞ்சை குருஜி கணபதி சுப்பரமன்யம் சாஸ்திரி, பஞ்ச முகப்ரத்தியங்கிராதேவிகோவில் சுவாமி ஜி,குன்றக்குடி மடாதிபதி பொன்னம்பலம் அடிகளார், பிள்ளையார் பட்டி கற்பகவிநாயகர் கோவில் ஸ்ரீ சிவபிச்சைகுருக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் டிரஸ்டி ஆன்மிக செம்மல் எஸ்பிதேவர் ஆகியோர் பாராட்டி வாழ்த்தி உள்ளார்கள்.



# மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் வழங்கும் மதுரைகள்ளழகர்



பிரசித்திபெற்ற அழகர்மலை உச்சியில் உள்ள நூபுரகங்கை தீர்த்தம் பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இங்கு ஒரு காலத்தில் சுதபஸ் என்ற முனிவர் நூபுரகங்கை தீர்த்தத்தில் நீராடிக் கொண்டிருந்தார். அப்போது துர்வாச மாமுனிவர் தனது சீடர்களுடன் அங்கு நீராட வந்தார்.

ஏற்கனவே நீராடிக் கொண்டிருந்த சுதபஸ் முனிவர் வந்தவர்களை கவனிக்காமல் நீராடி முடித்து பின்னர் துர்வாச முனிவரை வரவேற்றார். இதனால் சினம் கொண்ட துர்வாச முனிவர், சுதபஸ் முனிவரை பார்த்து மண்டுகமாகி (தவளை) போவாயாக என்று சாபமிட்டார்.

சுதபஸ் முனிவர் தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டு சாபவிமோசனம் கேட்டார். அதற்கு துர்வாச முனிவர் சித்திரை மாதம் பவுர்ணமி நிறைநாள் (சித்ரா பவுர்ணமி) தினத்திற்கு மறுநாள் வரும் கிருஷ்ணபட்ஷபிரதமை திதியில் கள்ளழகர் சுந்தரராஜபெருமாள் உமக்கு சாபவிமோசனம் அளிப்பார் என்று கூறிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். அதன்படி சாபத்தால் தவளையாக மாறிய சுதபஸ் முனிவர், கள்ளழகரை நினைத்து வைகை ஆற்றில் தவமிருந்தார். தவத்திற்கு மனமிறங்கிய அழகர் மதுரை வைகை ஆற்றில் இறங்கி மண்டூக மகரிஷிக்கு (சுதபஸ்முனிவர்) கருட வாகனத்தில் எழுந்தருளி சாபவிமோசனம் அளித்ததாக ஸ்தல புராண வரலாறு கூறுகிறது.




மானா மதுரை சித்திரைத் திருவிழாவினை காண வரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்!

அகிலா டிம்பர் டிரேடர்ஸ் ஸ்ரீ பெரியாண்டவர் மரக்கடை

M.S.P.A.உண்ணாமலை அம்மாள் திருமண மஹால்

A.T.T.லாட்ஜ் அகிலா காம்ப்ளக்ஸ்













அகிலா ஹார்டுவேர் & பிளைவுட் & பெயிண்ட்ஸ்



L.சுரேஷ்



S.அண்ணாமலை

பைபாஸ்ரோடு, மானாமதுரை

மரம், ஓடு, வெளிநாட்டு மரவகைகள் மற்றும் அனைத்து வகை மரங்கள் சைஸ் தரமாக கிடைக்கும், வீடுகட்ட தேவையான கட்டுமான பொருட்கள் தரமானதாக நியாயமான விலையில் எங்களிடம் கிடைக்கும்

செல்: 98424 68215 / 73737 68215


aanmeegamalar.com





மாதம் இரண்டு முறை வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"த்தை aanmeegamalar.com இணையதளத்தில் இலவசமாக படிக்கலாம்

160 க்கும் மேற்பட்ட இதழ்கள் உள்ளன


ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V.நடராஜன்
செல்: 9444228203

•••

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994323622

•••

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

•••

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.


# திருப்பதி பெருமாளின் கடைகண் பார்வையால் ஜொலிக்கும் வேலூர் தங்க கோவில்



வேலூர் ஸ்ரீ புரம் லட்சுமி நாராயணி கோயில் 5ஆயிரம் சதுர அடிபரப்பளவும் தங்கத்தால் இழைக்கப்பட்டு தங்க கோயிலாக விளங்குகிறது. இக்கோயில் 1500 கிலோ தங்கத்தில், ரூ.350 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது.

சுயம்பு லட்சுமி நாராயணி:

வேலூர், பொற்கோயில் எதிரேயுள்ள லட்சுமி நாராயணியும் சுயம்புவாக தோன்றியவள், இவள் ஒரு குடிசைக்குள் அருள்பாலிக்கிறாள். லட்சுமி நாராயணிக்கு கோயில்களை காண்பதே அரிது என்னும் போது, இத்தகைய சுயம்பு கோலத்தை காண்பது அரிதிலும் அரிது. ஏழுமலையானின் பார்வையில் திருமகள் வேலூர் மகாலட்சுமி, திருமலையில் அருளும் திருப்பதி வெங்கடாசலபதியின் கடைக்கண் பார்வைபடும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறாள்.

ஆரம்பகாலத்தில், இப்பகுதி திருமலைக்கோடி என்று அழைக்கப்பட்டது. மகாலட்சுமி கோயில் கட்டியபிறகு புரம் என்று பெயர் மாற்றப்பட்டது என்பது மகாலட்சுமியை குறிக்கும். திருப்பதி வெங்கடாசலபதியை தரிசிப்பவர்கள், அவரது துணைவி மகாலட்சுமி வாசம் செய்யும் வேலூர் நாராயணிபீடத்தையும் தரிசிப்பது சிறப்பு.

மகாலட்சுமி செல்வத்தின் அதிபதி. மூலஸ்தானத்தில் வைரம், வைடூரியம், முத்து, பவளத்தால் ஆன நகை, தங்க கவசம், தங்க கிரீடம் ஆகியவற்றுடன் தங்கத்தாமரையில் அமர்ந்த கோலத்தில் அவள் அருளுகிறாள்.

தங்கத்தில் ஜொலிக்கும் மகாமண்டபத்தில் நின்று கொண்டு அம்மனை தரிசித்தால் அஷ்ட ஐஸ்வரியங்களும், 16 வகையான செல்வங்களும் பெற்று மகிழ்வான வாழ்க்கை அமையும் என்பது நம்பிக்கை. தங்கக் கோயிலை சுற்றி 10 அடி அகலத்திற்கு தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது.



# EXPLORE

## akkarai
Responsible Snacking

INDIANFOODS INNOVATIONS

# YOU WILL
# LOVE OUR KIDS CAKE!
Also Our
# 10 CAKES & 4 BROWNIES!


KIDS CAKE


TEA CAKE


EGGLESS FRUITS & NUTS CAKE


CASHEW BROWNIES

Kids Cake | Tea Cake | Coconut Burfi Cake | Rich Fruit & Plum Cake | Cherry Tea Slice | Sponge Roll | Friday Bar
Friday Slice | Eggless Fruits & Nuts Cake | Eggless Banana Cake | Eggless Chocolate Cake
Cashew Brownies | Chocolate Brownies | Walnut Brownies | Eggless Chocolate Brownies

# Discover Our Colour-Free Cakes
*(Shelf-life in Days only, like fresh fruits.*
*Shelf-life not in Months, like preservatives added Industrial Cakes)*

## Probably, The Best Cakes of Madurai.

**We Also Offer Unique:**
**28 COOKIES | 9 SNACKS | 15 RUSKS**
**(Zero Chemical Colours, Flavours & Preservatives)**

akkarai express
Madurai City & Dindigul
serves our
**"Responsible Snacks"**

akkarai express
SKU's: 71
Madurai: KK Nagar | Kamarajar Salai | New Natham Road | TVS Nagar
9894460202 9842158111 9443034861
&
Dindigul: RM Colony
9790012718

**akkarai**
SKU's: 116
Madurai | Thattankulam | WhatsApp: +91 9791900447 | www.indianfoods.in

aanmeegamalar.com





# இடதுகையால் வா என்று அழைத்து வலதுகையால் வரம் தரும்

# பூமிநீளா சுந்தரராஜபெருமாள்

சிவகங்கை அருகே வேம்பத்தூர் அருள்மிகு சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் 1000–2000 வருடங்களுக்கு முன் பழமையான சிவகங்கை 2 கி.மீ மதுரை 46 கி.மீ. மானாமதுரையில் இருந்து 20கிமீ தூரத்தில் உள்ளது.

மதுரையிலிருந்து ராமேஸ்வரம் நான்கு வழி சாலையில் இருந்து திருப்பாச்சேத்தி செல்லும் வழியாக எளிதில் செல்லலாம்.



மூலவர் திருநாமம் பூமிநீளா சுந்தரராஜ பெருமாள் தாயார் திருநாமம் பூமிநீளா தாயார் உற்சவர் ஸ்ரீதேவி பூதேவி

இங்குள்ள பெருமாள், இடது கையால் நம்மை வர வழைத்து வலது கையால் அருள்பாலிக்கிறார். இந்த பெருமாளை, சிற்ப சாஸ்திரம் ஆரம்பிப்பதற்கு முன்பு உள்ள முறைப்படி, உளி கொண்டு செதுக் காமல் கல்லையே கொண்டு செதுக்கி வடிவமைத்து உள்ளார்கள்.

முன்னொரு காலத்தில் குலசேகர பாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்ட போது, கடும் வறட்சி ஏற்பட்டது. இவன் சோழ இளவரசியைத் திருமணம் செய்திருந்தான். சோழநாட்டில் நீர் நிறைந்து பயிர் விளைந்து செழிப்பாக இருக்கும் பூமியைப் பார்த்து ஆச்சரியப்பட்டான் பாண்டியன். இவன் தன் மாமனாரிடம்,"எங்கள் நாட்டில் ஏற்பட்ட வறட்சி நீங்க என்ன செய்ய வேண்டும்?" என்றான்.

"காசியிலிருந்து 2008 அந்தணர்களை அழைத்து வந்து உன் நாட்டில் யாகம் செய்தால் மழை பொழியும். பயிர் செழிக்கும்" என்றார் சோழன். யாகம் நடத்த 2008 அந்த ணர்கள் குடும்பத்துடன் வந்தனர். யாகம் சிறப்பாக நடந்து மழை பொழிந்தது. விளைச்சல் பெருகியது.

மன்னனுக்கு அளவில்லாத ஆனந்தம். யாகம் செய்த அந்தணர்களுக்கு அவர்களது பெயரிலேயே நிலம் கொடுத்து இங்கேயே தங்க ஏற்பாடு செய்தான். நிலப்பட்டா கொடுக்கும் போது, 2007 அந்தணர்கள் வந்து விட்டனர். 2008வது அந்தணரான கணபதி என்பவரை மட்டும் காணவில்லை. மன்னனுக்கு வருத்தம். என்ன செய்வதென்று தெரியவில்லை. சிறிது நேரத்தில் அந்த முழு முதற்கடவுளான விநாயகரே, அந்தணர் வடிவில் நேரில் வந்து,"நான் தான் கணபதி" என்று கூறி நிலத்தைப் பெற்றுக் கொண்டார். அப்படிப் பெற்றுக்கொண்ட நிலம் தான் வேம்பத்தூர். இந்த கணபதி ஊரின் குளக்கரையில் இன்றும் "2008 கணபதி" என்ற பெயரில் வீற்றிருந்து வேதம் சொல்லி தருவதாக ஐதீகம்.

ஊரின் எல்லையில் 2008 விநாயகர் தனி சன்னதியில் அருள்பாலிக்கிறார். கோயில் பிரகாரத்தில் லட்சுமி நாராயணன், லட்சுமி நரசிம்மர், லட்சுமி ஹயக்கிரீவர், லட்சுமி பூவராகர் சரஸ்வதி அருள்பாலிப்பது மிகவும் சிறப்பு. இப்படி நால்வரும் ஒரே இடத்தில் அருள்பாலிப்பதால் இங்கு வந்து வழிபடுபவர்களது பணக்கஷ்டம் நீங்குவதுடன், கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கி, பண்டிதராகவும் விளங்கு கிறார்கள்.

கோயிலுக்குள் பிள்ளையார், கருப் பண்ண சுவாமி, கருடாழ்வார், ஆஞ்சநேயர், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக சுந்தரராஜபெருமாளின் பத்து அவதார மூர்த்திகளும் தனித்தனியே அருள்பாலிக் கிறார்கள்.

பதினோறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த கவிராஜ பண்டிதர் இந்த பெருமாளை வழிபட்டு ஆதிசங்கரர் இயற்றிய சவுந்தர்யலஹரி மற்றும் ஆனந்த லஹரியைத் தமிழில் மொழி பெயர்த் துள்ளார். அத்துடன் இவர் மானாமதுரை ஆனந்தநாயகி மாலையும், வேம்பத்தூர் வாராஹியின் மேல் புவனாம்பிகை கலை ஞான தீபமும், மேலக் கொடுமனூர் முருகன் மீது ஞான உலாவும் பாடியுள்ளார்.

இவர்கள் தவிர தமிழ்சங்க புலவர்களில் ஒருவரான வேம்பத்தூர் குமரனார் அகநானூறில் 157வது பாடலையும், புறநானூறில் 317–வது பாடலையும், தமிழ்சங்க புலவர்களில் மற்றொருவரான வேம்பத்தூர் கண்ணன் கூத்தனார் குறுந்தொகையில் 362வது பாடலையும், சுந்தராஜ பெருமாளை வழிபட்டு பாடியுள்ளார்கள்.

இங்குள்ள மக்களில் பலர் பண்டிதர்களாகவும், ஆகம சாஸ்திரங்களிலும், மருத்துவத்திலும் வல்லுனர் களாகவும் விளங்குகிறார்கள்.



இத்தலத்து உள்ள பெருமாள் கல்வி, செல்வம் இரண்டிற்குமே அதிபதியாக உள்ளார். கவிச்சக்கரவர்த்தி கம்பரும், காளமேகப்புலவரும் இவரை வணங்கி, தங்களது புலமை மேலும் சிறக்குமாறு வழிபட்டு சென்றுள்ளதற்கான கல்வெட்டு சான்றுகள் உள்ளன. வேம்பத்தூர் பெருமாளின் கருணையால் கவிராஜபண்டிதர் பெற்ற கவித்திறமையை அறிந்த மதுரை மீனாட்சி, பண்டிதர் காசி சென்ற போது அவருக்கு மகளாக இருந்து சேவை புரிந்திருக்கிறாள்.

பல புகழ்பெற்ற கவிஞர்களைப் போலவே, 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிராஜ பண்டிதர், ஆதி சங்கரரின் 'சௌந்தர்ய லஹரி' மற்றும் 'ஆனந்த லஹரி' ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார், இது பலரிடமிருந்து பாராட்டைப் பெற்றது என்று கல்வெட்டுகள் கூறுகின்றன.

மிகவும் பழங்காலத்து பெருமாளான இவரை வணங்கினால் நாவன்மையும், கவிப்புலமையும் கிடைக்கும்.

குழந்தைகளை பள்ளிகளில் சேர்ப்பதற்கு முன்பும், வேதபாட சாலைகளில் சேர்ப்பதற்கு முன்பும், உயர்படிப்பு, மேல்படிப்பு செல்வதற்கு முன்பும் படிப்பிற்கு தகுந்த வேலை கிடைக்கவும் இத்தல பெருமாளை வழிபட்டு செல்வது நல்லது.

பிரார்த்தனை நிறைவேறியதும் பெருமாளுக்கும் தாயாருக்கும் திருமஞ்சனம் செய்து, புது வஸ்திரம் சாத்தி வழிபாடு செய்கின்றனர். வைகுண்ட ஏகாதசி ஆஞ்சநேயர் ஜெயந்தி சிறப்பாகவும் பெருமாளுக்கு உரிய நாட்களில் பூஜைகள் சிறப்பாக நடைபெறுகிறது. தரிசன நேரம் காலை 6 மணி முதல் 11 மணி வரை, மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும். வரும் ஜூலை மாதம் முதல் தேதி வருஷாபிஷேகம் நடைபெறுகிறது.

ஆலய தொடர்புக்கு 9791583169




# பெருமாளுக்கு காவலராக சேவை புரியும் காலபைரவர்!



பூலோகத்தின் வைணவ திருத்தலங்களில் ஒன்றான திருக்குறுங்குடி நம்பி கோயிலில் மட்டுமே அமைந்துள்ள மூச்சுவிடும் காலபைரவர்.

திருக்குறுங்குடி நம்பி கோயில் பிராகாரத்தைச் சுற்றி வரும்போது பிரமாண்ட உருவினராக நமக்கு தரிசனம் தருபவர் கால பைரவர்.

பொதுவாகவே சிவன் ஆலயங்களில் பைரவர், அந்தக் கோயிலைக் காக்கும் தெய்வமாகவே வணங்கப்படுவார்.

இரவில், பூஜைகளை முடித்து விட்டு, கோயிலைப் பூட்டி, சாவியை பைரவரிடம் சமர்ப்பித்துவிட்டுச் செல்வதும் மறுநாள் காலையில், அவரிடமிருந்து

சாவியைப் பெற்றுக் கொண்டு கோயிலைத் திறப்பதும் நடைமுறை.

அந்தவகையில், இங்குள்ள காலபைரவர், பெருமாளுக்கும் காவலராகப் பணிபுரிகிறார் என்றே சொல்லலாம்.

பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்ததால் ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷத்தை சிவபெருமான் இந்தத் திருக்குறுங்குடி தலத்தில்தான் போக்கிக்கொண்டார் என்பதால், அவருடைய அம்சமான பைரவர், அந்த நற்பணிக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இவ்வாறு இங்கு காவல் பொறுப்பை மேற்கொண்டிருக்கிறார் என்கிறார்கள்.

திருக்குறுங்குடி நம்பிகளை தரிசனம் செய்வது என்பது வெறும் அர்ச்சாவதார தரிசனமாக இருக்காது.

பெருமாளை அப்படியே உயிரோட்டமாக, உணர்வுபூர்வமாக சந்திப்பதாகவே இருக்கும்.

ஆமாம், பட்டர் தீபாராதனைத் தட்டை மேல் தூக்கி நம்பிகளின் முகத்தருகே கொண்டுபோகும் போது, அந்தச் சிலையின் விழிகள் அசைவது நம்மை அப்படியே சிலிர்க்க வைக்கும்.

இடமிருந்து வலமாக தீபம் அசையும்போதும் மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் என்று போகும்போதும், அந்த ஒளியில் மின்னும் பெருமாளின் விழிகள் அந்தந்த திசை நோக்கித் திரும்புவதை அனுபவித்து பார்த்துதான் உணர முடியும்.

அதை நம்ப முடியாமல் கண்களைக் கசக்கிக்கொண்டு மறுபடி நம்பிகளைப் பார்த்தால், தன் தாமரை மலர்க் கண்களால் அவர் சிரிக்கிறார்.

அது தீபாராதனையின் ஒளி மாயமோ, தேர்ந்த சிற்பியால் வடிக்கப்பட்ட அந்தக் கண்களின் பளபளப்பு மாயமோ, எதுவாயினும் சரி, ''என்ன சௌக்கியமா?'' என்று கேட்கும் அந்தப் பார்வை அதிசயமானதுதான், அபூர்வமானதுதான்.

தரிசனம் முடித்துத் திரும்பும்போது தற்செயலாக மறுபடி அந்தக் கண்களை ஒரு நேர்க்கோட்டு வீச்சில் கவனிக்கும்போது, ''போய்வா, சந்தோஷமாக இருப்பாய்,'' என்று ஆசிகூறும் ஒளியை சந்திக்க முடிகிறது.




கீதா சமையல்
geetha samayal YouTube channel
ஆயிரம் சமையல் வீடியோக்கள் உள்ளன

விழியசைத்து வியப்பளிக்கும் திருக்குறுங்குடி பெருமாளைப்

போலவே, இந்த கால பைரவரும் தன் மூச்சிழையால் பக்தர்களின் மனதில் பரவசத்தைப் பரப்புகிறார்.

ஆமாம், இந்த கால பைரவருக்கு இடது பக்கத்தில் ஒரு விளக்குத் தூண். இதன் மேல் பகுதியில் ஒரு விளக்கு, கீழ்ப் பகுதியில் இன்னொரு விளக்கு.

இவை தவிர இரண்டு சர விளக்குகளும் உண்டு. இந்த நான்கு விளக்குகளிலும் தீபம் ஒளிசிந்தி பைரவரின் முழு ரூபத்தையும் தெளிவாகக் காட்டுகின்றன.



இதில் அதிசயம் என்னவென்றால், மேலே உள்ள விளக்கின் ஜ்வாலை, காற்றுபட்டால் அசையும் தீபம் போல அலைவதுதான்.

ஆனால் பிற மூன்று விளக்கு ஜ்வாலைகளும் சீராக எந்தச் சலனமுமில்லாமல் எரிந்து கொண்டிருக்கின்றன.

மேல் விளக்கு ஜ்வாலை மட்டும் அசைவானேன்?

அது பைரவரின் மூச்சுக் காற்று ஏற்படுத்தும் அசைவு.

மூச்சு இழுக்கும்போது ஜ்வாலை அவரை நோக்கித் திரும்பியும் விடும்போது எதிர்திசையில் விலகியும் அசையும் சலனம். விஞ்ஞானபூர்வமாக சிந்திக்கவும் காரணம் கண்டு பிடிக்கவும் இயலாத தெய்வீகம். பிரமிப்பில் விரியும் விழிகள் இமைக்க மறப்பது அனுபவபூர்வமான உண்மை.

இவருக்கு வடைமாலையும் பூச்சட்டையும் சாத்துவது பிரதான பரிகார வழிபாடாக மேற்கொள்ளப்படுகிறது.

வடைமாலை என்றால் ஆஞ்சநேயருக்கு சாத்துவார்களே அதுபோல அல்ல; மிகப்பெரிய ஒரு அளவில் ஒரேவடையாகத் தட்டி அதை நிவேதனம் செய்யும் முறைதான் இது.

இந்த பைரவர் 75 சதவீதம் கல்லாலும், மேலே 25 சதவீதம் சுதையாலும் ஆன சிற்பமாகத் திகழ்கிறார்.

மூலிகை வண்ணத்தால் இவருக்கு அழகு தீட்டியிருக்கிறார்கள். 300 வருடங்களாகியும் அந்த வண்ணங்கள் வெளிராமலும் மெருகு குலையாமல் இருப்பதும் அதிசயம்தான்.

இவருக்குத் தயிரன்னம் நிவேதிக்கப்படுகிறது. திருமண வரம் வேண்டியும் மழலைப் பேறு கோரியும் வரும் பக்தர்கள் இவர் அருளாசியால் அந்த பாக்கியங்களைப் பெற்று மகிழ்கிறார்கள்.




aanmeegamalar.com






# திருப்பதி ஏழுமலையான் காட்சியளித்த அப்பன் பெருமாள் கோவில்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்றுகரையில் உள்ள பிரசித்தி பெற்ற, சுமார் 400 ஆண்டுகள் பழமையான அப்பன் பெருமாள்கோவில் ஆகும்.

இங்கு ஸ்ரீதேவி பூதேவியுடன் திருப்பதி வெங்கடாஜல பதியே நேரில் காட்சி தருவ தாக பக்த்தர்களால் நம்பப்படுகிறது. திருப்பதி ஈழுமலையானின் தீவிர பக்தர் ஒரு வருக்கு காட்சி அளித்த தலமாக கூறப்படுகிறது.



திருப்பதி வெங்கடாசல பதிக்கு அன் றாடம் சேவை செய்யும் பிராமனர்" ஒருவர் மானாமதுரை வழியே ராமேசு வரம் தீர்த்த யாத்திரைக்கு செல்லும் வழியில் வைகை ஆற்றங்கரையில் இரவு பொழுதில் தங்கி யாத்திரை தொடங் கலாம் என முடிவு செய்து ஓய்வு எடுத்தார்.

தினமும் திருப்பதி வெங்கடேச பெருமாளுக்கு சேவிக்கும் அடியேன் தீர்த்த யாத்திரை வந்ததால் பல நாட்களாக ஏழுமலையானை தரி சிக்க முடியவில்லைய என மனதில் நினைத்து புலம்பியபோது உத்தம பக்தனுக்கு அருகில் பளிச்சென ஒளிவட்டம் ஏற்பட்டது. அதில் திருப்பதி வெங்கடாசலபதி சங்கு சக்கரத்துடன் விஸ்வரூபமாய் காட்சி அளித்தார்.



அப்போது பிராமணர் கண்விழித்து எழுந்து அப்பனே! பெருமாளே திருப்பதி ஏழுமலையானே என்று சொல்லி திருவடி வணங்கி யாத்திரையாக புறப்பட்டு சென்றார்.

ராமேஸ்வரம் சென்று புனித நீராடியபின் மீண்டும் வைகை ஆற்றுகரையில் ஓய்வு எடுத்த இடத்தில் திருப்பதி பெருமாள் அருள் ஆசிவழங்கியதை மக்களிடம் திருப்பதி எழுமலையானோ இங்கு தோன்றி நமக்கு காட்சி அளித்து ஆசி வழங்கியதை மக்க ளிடம் தெரிவித்தும் சென்றனர்.

அதைத்தொடர்ந்து பிராமனார்' கூறிய இடத்தில் அப்பகுதியில். பெருமாளுக்கு கோவில் கட்டப்பட்டது. பக்தர் ஒருவர் அப்பனே பெருமாளே என்று கூறியதால் அப்பன் பெருமாள் என்ற திருநாமத்துடன் கோவில் கட்டப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருப்பணிகள் தொடங்கி கோவில் புதுபிக் கப்பட்டு கடந்த 2021 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இங்கு நடைபெறும் சித்திரை திருவிழா வில் வீர அழகர் இரண்டு நாள் தங்கி செல்லும் நிகழ்ச்சி மற்றும் சித்திரை திருவிழா நிறைவு அப்பன்பெருமாள் கோவிலில் நடைபெற்று வருகிறது.

கோவில் தூண்களில் பல ஆண்டுகளுக்கு முன்பே பெரு மாளின் வடிவில் ஆஞ்சநேயர் இந்த ஆபூர்வ காட்சி பாது காக்கப்பட்டு வருகிறது.


ஆஞ்சநேயருக்கு தனி சன்னதி, ஹயக்ரீவர் தனி சன் னதி, வைகுண்ட வாசல் என உள்ளது.

திருமலை திருப்பதி ஏழுமலை யானை தரிசிக்க செல்ல முடியாதவர்கள் இங்கு சென்று திருப்பதி வெங்க டாஜலபதியை தரிசித்த பலனை பெறலாம் என கூறப்படுகிறது.

# பெருமாள், திருமால், நாராயணன் என்ற பெயரின் பொருள்

பெருமாள் என்னும் பெயர் ஸ்ரீ வைஷ்ணவர்களால் ஸ்ரீமன் நாராயணனை அழைக்கும் பெயராகும். நாம் இப்போது பெருமாளை பற்றிய கருத்துகளையும் அதன் காரணங்களையும் 4000 திவ்யப் பிரபந்தத்தின் அடிப் படையில் காண்போம்.

### பெருமாள் என்பதின் பொருள்



பெருமாள் என்ற பெயரின் அர்த்தம் இரண்டு வகையில் விளக்கப்படுகிறது. பெரும் என்றால் உயர்ந்தது. ஆள் என்றால் மனிதன். அதாவது உயர்ந்த மனிதன். மனிதர் களில் உயர்ந்தவன். புருஷோத்தமன் புருஷர்களில் உயர்ந்தவன்.

பெரு என்றால் உயர்ந்த, மால் என்றால் விஷ்ணு. விஷ்ணுவிற்குத் தமிழில் மால் என்ற ஒரு பெயரும் உள் ளது. பெருமால் தான் பெருமாள் ஆக மாறியது. ஆகவே பெருமாள் என்பது மகாவிஷ்ணுவைக் குறிப்பதாகும்.

### திருமால் என்பதின் பொருள்

திரு என்றால் லக்ஷ்மி. மால் என்றால் நாராயணன். ஆகவே திருமால் என்றால் லக்ஷ்மி நாராயணன் ஆகும்.

### நாராயணன் என்பதன் பொருள்

நாரம் என்றால் சம்ஸ்கிருதத்தில் தண்ணீர் என்று பொருள். அயனன் என்றால் இருப்பவர் என்று பொருள். எவரொருவர் தண்ணீரில் இருப்பிடத்தைக் கொண்டிருக்கிறாரோ, அவருக்கு நாராயணன் என்று பெயர்.

பெருமாள் அந்த பாற்கடலையே தன்னுடைய இருப்பிடமாகக் கொண்டவர். அவர் ஆதிசேஷன் நாகத்தின் மேல் பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கிறார்.




# காஞ்சியைப் போன்று தத்ரூபமான விக்ரகத்துடன் பெரியவா பாதுகைகளை பாதுகாக்கும் மதுரை கோவில்

காஞ்சியின் கருணைக்கடல் 'ஸ்ரீ காஞ்சி மகா பெரியவா' நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம். அவரை ஆத்மார்த்த குருவாக ஏற்றுக் கொண்ட பக்தர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நெகிழ்ச்சியான பல நிகழ்ச்சிகளே அதற்குச் சான்று. காஞ்சியில் அருளும் ஸ்ரீ காமாட்சியின் அருளுக்குப் பாத்திரமான ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவா, மீனாட்சி அருளாட்சி செய்யும் மீனாட்சி பட்டணமான மதுரையில் குடி கொண்ட வரலாறும் நெகிழ்ச்சியாக இருக்கிறது.

மகா பெரியவாவின் தொண்டர்களில் ஒருவர் நெல்லை பாலு. காஞ்சிபுரத்தில் பத்திரிக்கையாளராக பணியாற்றி காஞ்சி மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு சேவை செய்து வந்தவர். மகா பெரியவரின் காலத்திற்கு பிறகு, குடும்ப சூழல் காரணமாக மதுரைக்கு இடம் பெயர்ந்தார். மகா பெரியவாவின் தீவிர பக்தரான இவருக்கு அடிக்கடி காஞ்சிபுரம் சென்று தரிசிக்க இயலவில்லையே என்ற மனக்குறை மட்டும் தீரவில்லை. எனவே, மதுரையில் அனுஷத்தின் அனுகிரகம் என்ற அமைப்பை தொடங்கி மகா பெரியவரின் பிறந்த நட்சத்திரமான ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், மதுரையிலேயே பொது இடத்தில் அவரது படங்களை வைத்து பூஜிப்பதை வழக்கமாக செய்து வந்தார். பெரியவா குறித்த சொற்பொழிவுகளையும் ஏற்பாடு செய்து வந்தார். இவ்வாறு, பூஜைகளும், வழிபாடுகளும் தொடர்ந்தன. இதில் கலந்து கொண்ட பல பக்தர்களும் மதுரையில் பெரியவருக்கு ஒரு வழிபாட்டுத்தலம் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற தங்களின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி வந்தனர். அதன் பின்னர் அரங்கேறிய சம்பவங்கள் தான் காஞ்சி பெரியவரின் அனுக்கிரகம்.



அது பற்றிப் பேசிய நெல்லை பாலு, "2012 ஆம் ஆண்டில், மகா பெரியவரின் வருடாந்திர ஜெயந்தி விழாவிற்கு சுமார் 2 வாரங்களுக்கு முன்பாக, கனவில் மகாபெரியவரின் விக்ரகம் ஒன்று தொடர்ச்சியாக வந்தது. அதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் காஞ்சி மடத்திற்கு சென்று விட்டேன். ஜெயேந்திரரிடம் கனவைப் பற்றியும் பகிர்ந்து கொண்டேன். நான் கூறியபடி ஒரு சிலையை பக்தர்கள் இதற்கு முன்பாக மடத்திற்கு கொடுத்துள்ளதாகவும் அப்போது அவர் தெரிவித்தார். பின்னர், மகாபெரியவரின் அதிஷ்டானத்தில் வழிபட்டு விட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அப்போது, மடத்திற்கு வந்திருந்த சுமார் ஏழு வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் என்னருகே வந்து, 'சிலை விஷயமாத்தானே புது பெரியவாவிடம் பேசுனீங்க!' எனக் கேட்க, ஒரு கணம் அதிர்ந்தே போய் விட்டடேன். நான் உள்ளே பேசியது வெளியில் இருந்த சிறுவனுக்கு எப்படித் தெரியும்? என வியப்பு எனக்கு! அதற்குமேல் பேசாத அந்தச் சிறுவன், ஒரு தொலைபேசி எண்ணை மட்டும் கொடுத்துவிட்டு விறுவிறுவென அங்கிருந்து நடையைக் கட்டி விட்டான். அங்கு அந்தச் சிறுவனை தவிர வேறு யாரும் இல்லை. ஒருவேளை பெற்றோர்களுடன் வந்திருந்தாலும் கூட, அப்படி யாரும் அங்கு இருந்ததாகவும் தெரியவில்லை.

குழப்பத்தோடு, சிறுவன் கொடுத்த எண்ணை தொடர்பு கொள்ள, எதிர்முனையில் பேசியவர் கும்பகோணத்தில் இருந்த ஒரு சிற்பி. 'இது பெரியவாவின் அனுக்கிரகம்!' என்று அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். கனவில் கண்டபடி சிலை வடிக்க வேண்டும் என்று ஸ்தபதியிடம் கேட்க, அவ்வாறு சிலை வடிக்க தாமதம் ஆகும் என்று சொன்ன சிற்பி, ஏற்கனவே காஞ்சிப் பெரியவரின் ஒரு சிலை தயாராக இருப்பதாகச் சொல்லி, சிலையையும் மதுரைக்கு அனுப்பி விட்டார்" என்றார் வியப்பு குறையாமல்.

அதன்பின்னர், பக்தர்களின் பங்களிப்புடன் சிலையை பிரதிஷ்டை செய்து, 'ஸ்ரீ மஹா பெரியவா க்ருஹம்' என்னும் பெயரில் வழிபாட்டு மையம் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மதுரையில் குடி கொண்டு, பக்தர்களுக்குத் தன் அருளாசியை வழங்கி வருகிறார் மகா பெரியவா.

காஞ்சிப்பெரியவர் தனது கடைசி கால கட்டத்தில் இருந்த தோற்றத்தில் உள்ளது இங்குள்ள சிலை. உடல் மெலிந்து, நெஞ்சின் விலா எலும்புகள் புடைப்பாக தெரியும்படி தத்ரூபமாக இருக்கிறது. காஞ்சிபுரம் மடத்தில் ஒவ்வொரு அனுஷம் நட்சத்திரத்தன்றும், தங்கச் சப்பரத்தில் அவரது சிலை உலா வரும். கிட்டத்தட்ட அந்தச் சிலையை ஒத்த அளவிலேயே இங்குள்ள சிலையும் அமைந்திருப்பது சிறப்பு.

காஞ்சிப்பெரியவர் பயன்படுத்திய ஒரு ஜோடி பாதுகைகளும் இங்குள்ளன. காஞ்சி மடத்தில் இருந்து பெறப்பட்ட பாதுகைகள் இவை. அவரது திருவுருவச் சிலையின் முன்பாக வைக்கப்பட்டுள்ள இதற்கு, வெள்ளி கவசம் சார்த்தப்பட்டுள்ளது. மேலும் அவரது காணக்கிடைக்காத 40க்கும் மேற்பட்ட பெரிய புகைப்படங்கள் பிரேம் செய்யப்பட்டு மாட்டப் ப்பட்டுள்ளது. இங்கே வரக்கூடிய பக்தர்கள் காஞ்சி பெரியவரையும், அவரது பாதுகைகளையும் வணங்கி அவரது அருள்பெற்றுச் செல்கிறார்கள். ஒவ்வொரு அனுஷம் நட்சத்திர நாளன்றும், சிறப்பு அபிஷேகம், ஆராதனை பூஜை மற்றும் வழிபாடுகள் உண்டு. அப்போது சுவாமி சிலைக்கும், பாதுகைகளுக்கும் அபிஷேகம், பூஜைகள் நடக்கின்றன. தவிர, வியாழன்தோறும் குருவார பூஜையும் நடக்கிறது. அப்போது, 'காஞ்சி பெரியவர் அஷ்டோத்திரம்' சொல்லி, தீபாராதனையுடன் பூஜைகளும் சிறப்பாக நடக்கும். கடந்த 130 மாதங்களாக இந்த பூஜை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எங்கே இருக்கிறது? மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 3 கிலோமீட்டர் தொலைவில் உள்ள, எஸ்.எஸ்.காலனி எண் 13 பொன்மேனி நாராயணன் ரோட்டில் அமைந்துள்ளது. அரசரடி அல்லது காளவாசல் பஸ் ஸ்டாப்பில் இறங்கி, அங்கிருந்து ஆட்டோவில் செல்லலாம்.

திறப்பு நேரம் காலை 8 10 மணி, மாலை 5 இரவு 8 மணி, தொடர்புக்கு: 94426 30815

# சிறிது துளசியை சேர்த்து கொடுங்க...


வீட்டில் துளசியை வளர்ப்பது மிகச் சிறப்பு. காலையில் எழுந்ததும் துளசியைத் தரிசிப்பதால் நம் தீவினைகள் மறையும். தானம் கொடுக்கும்போது சிறிது துளசி யுடன் தானம் கொடுக்க வேண்டும். மகாலட்சுமியின் வாசம் நிறைந்த துளசி யுடன் தானம் கொடுக்கும்போது,பெறு பவருக்கும் கொடுப்பவருக்கும் மகா லட்சுமியின் ஆசி பரிபூரணமாக கிடைக் கும், துளசியோடு தரப்படாத தானம் வீண் என்று முன்னோர் வரையறைத்துள்ளனர்.





செல்வத்திற்குரிய தெய்வங்களான வெங்கடாஜலபதி, லட்சுமி, குபேரன் ஆகியோர் படங்களை வீட்டின் வெளிப்புறம் பார்த்து இருக்குமாறு மாட்டக்கூடாது.

ஈர உடையுடனும், ஒராடையுடனும், தலைகுடுமியை முடியாமலும், தலையிலும், தோளிலும் துணியை போட்டுக் கொண்டோ, கட்டிக் கொண்டோ வழிபாடு செய்யக் கூடாது.





சாமிக்கு படைக்கும் போது வாழை இலை போட்டு படைக்கிறோம். அப்படி வாழை இலை போடும் போது வாழை மரத்திலிருந்து நறுக்கப்பட்ட பகுதி சுவாமி படத்திற்கு வலது பக்கம் வரவேண்டும்.

# பூஜை அறை படங்கள்



பூஜை அறையிலோ, வீட்டிலோ தெய்வப் படங்களை கிழக்கு நோக்கி வைக்க வேண்டும். வணங்குபவர் தெற் குப் பகுதியில் வடக்குத் திசையைப் பார்த்தவாறு அமர்ந்து வணங்கலாம். தெற்கு நோக்கி தெய்வப் படங்களை வைக்கக் கூடாது. கிழக்குப் பக்கம் முடியாவிட்டால் தெற்குப் பக்கத்தைத் தவிர பிற திசைகளைப் பார்த்து படங் களை வைக்கவும்.

பூஜை செய்பவர் தெற்கு, தென் கிழக்கு, தென்மேற்கு ஆகிய திசை களைப் பார்த்து கொண்டு உட்கார்ந்து பூஜை செய்யக்கூடாது.

# விஷ்ணு கோவிலில் தரிசனம் முடித்தபின் உட்காராதீர்கள்

விஷ்ணுவை வணங்கி வீடு திரும்புபோது லட்சுமி தேவியும் நம்முடன் நம் வீட்டுக்கு வருகிறாள் என்பது ஐதீகம். ஆகவே விஷ்ணு கோவிலிலிருந்து வீடு திரும்புமுன் அங்கே உட்காரக் கூடாது.

வீடுகளில் பூஜை செய்யும்போது கடவுள் உருவங்களின் பாதங்கள் மற்றும் முகத்தைப் பூக்களால் மறைத்து விடக்கூடாது. முகமும், பாதமும் திறந்து நிலையில் இருக்க வேண்டும்.





# வனவாசத்தில் இராமன் வழிபட்ட ஆனந்தவல்லி அம்மன் சோமநாதப்பெருமான்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வைகை ஆற்றுக்கரையில் அற்புதங்கள் நிறைந்த ஸ்ரீஆனந்த வல்லிசோமநாத சுவாமி திருக்கோயில் உள்ளது இக் கோவில் ஆதி காலத்தில் வில்வ வனகாட்டில் இருந்ததால் வில்வ வன ஷேத்திரம் என்று அழைக்கப்பட்டு வந்து உள்ளது சந்திர பகவான் தனக்கு தட்சண் இட்ட சாபத்தால் தொழுநோய் ஏற்பட்டு அது நீங்க கோவில் முன் உள்ள சந்திர புன்கரணி தீர்த்தத்தால் நீராடி வில்வ வனகாட்டில் இருந்த அம்மனையும் சிவபெருமானை வணங்கி தொழுநோய் நீங்கியதாகவும் நோய்கள் தீர்ந்து ஆனந்தம் அடைந்ததால் ஆனந்த வல்லியாகவும் சோமநாதராகவும் ஒரு மண்டலம் வணங்கி ஆனந்தம் அடைந்தான் என கூறப்படுகிறது.

பெருங்குளமாக இருந்த புஷ்கரணி தற்போது ஒரு சிறிய கிணறாக உள்ளது. மதுரை மீனாட்சி அம்மன் ஆட்சி காலத்தில் பின் வைகை ஆறு இங்கு வந்துள்ளது அதேபோல் மலிக் காபூர் படையெடுப்பின் போது நாயக்க வம்சத்தால் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை இங்கு உள்ள வனகாட்டில் மறைத்து வைத்து பாதுகாத்து பின் மதுரை சென்றதாகவும் கூறப்படுகிறது.

ராமயன காலத்தில் ராமர் தனது வானர படைகளுடன் இங்கு தங்கி ஆனந்தவல்லி அம்மனையும் சுயம்பு லிங்கமாக உள்ள சோமநாதரை தரிசித்து ராவணனை வென்றதாகவும் கூறப்படுகிறது.

மானச சஞ்சரே என்று பாடிய ஸ்ரீசதாசிவ பிரம் மேந்திராள் ஒரே நேரத்தில் மானா மதுரை ஆனந்தவல்லி அம்மன் கோவில் கரூர் மாவட்டம் நெரூர் மற்றும் ஓம்கார் காசி கராச்சி ஆகிய இடங்களில் ஓர் ஜோதி வடிவில் ஜுவசமாதி அடைந்ததாக கூறப்படுகிறது .



இங்கு உள்ள ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் சன்னதி முன்பு

மனம் முருகி வேண்டும் போது தீராத நோய்களும் நீங்குவதாக நம்பப்படுகிறது.

மானாமதுரையில் ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் இந்தியாவின் உள்ள அனைத்து இசை கலைஞர்களும் மூன்று நாள் இங்கு தங்கி ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் இசை ஆராதனை நடத்தி வழிப்பாட்டடும் செல்கின்றனர்.



மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புகளுடன் துன்பம் நீங்கி நோய்கள் போக்கி ஆனந்த தலமாகவும் இம்மை பயன எிக்கும் மோகன சுந்தர தலமாகவும் உள்ளது.

பாஞ்சால மன்னர்ஸ்துல கர்ணன் வில்வக் காட்டை அழித்து பட்டணம் உருவாக்கி வெள்ளை நிறத்தோடு கூடிய சுயம்பு மூர்த்தியாம் சிவலிங்கத்தை வணங்கி ஆலயம் கட்டிய தாக கூறப்படுகிறது. ஆனந்தவல்லி அம்மன் கோபுரம் முன்பு நின்ற நிலையில் உள்ள விநாயகர் தனி சன்னதியும் சூரியன் சந்திரன் கால பைரவர் வள்ளி தெய்வானை சுப்பிரமணிய சுவாமி சன்னதிகளும் உள்ளது வில்வகாட்டில் இருந்ததால் தல விருட்ச மரம் வில்வத்துடன் கூடிய சிவ தலமாக உள்ளது.

ஆண்டு தோறும்மதுரை மீனாட்சி அம்மன் திருக் கோயில் எப்படி திருவிழா நடைபெறுகிறதோ அதேபோல் இங்கு சித்திரை திருவிழா ஆடித்தபசு நவராத்திரி சதாசிவபேந்திராள் இசை ஆராதனை போன்ற விழாக் கள் நடைபெறுகிறது.

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரரை பாதுகாத்த வில்வ காடாகவும் தொழுநோய் பாதிக்கப்பட்ட சந்திரபகவான் குணமடைந்தாலும் அகத்தியர் மாணிக்கவாசகர்போன்றோர் வணங்கி ஆனந்தம் அடைந் தாலும் வானர படைகளுக்கு பசி நீங்கியதாலும் ஸ்ரீ சதாசிவ பிரேம்மேந்திராள் ஜுவசமாதி அடைந்து முக்தி பெற்றாலும் அற்புதங்கள் நிறைந்த கோவிலாக ஆனந்தவல்லி சோமநாதசுவாமி திருக்கோயில் உள்ளது. மதுரை இராமேஸ்வரம் செல்லும் சுற்றுலா பயணிகள் தினமும் இங்கு வந்து வழிபட்டு செல் கின்றனர் மதுரையில் இருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மானாமதுரை ஆனந்தவள்ளி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.




# திருமலை திருப்பதியும் அற்புத தகவல்களும்!

தெய்வச் சிலைகள் பொதுவாக கருங்கல்லில் செதுக்கப்பட்டிருக்கும். எங்காவது ஓரிடத்திலாவது சிற்பியின் உளி பட்ட இடம் தெரியும். ஆனால், இப்படி எவ்விதமான அடையாளத்தையும் வெங்கடாஜபதி சிலையில் காணமுடியாது. அது மட்டுமல்ல! சிலையில் வடிக்கப் பட்டுள்ள நெற்றிச் சுட்டி, காதணிகள், புருவங்கள், நாகாபரணங்கள் எல்லாம் பாலீஷ் போட்ட நகைபோல பளபளப்பாக மின்னுகின்றன.

❖ திருமலை 3000 அடி உயரத்தில் உள்ள குளிர் பிரதேசம். இருந்தாலும், அதிகாலை 4.30 மணிக்கு குளிர்ந்த நீரால் அபிஷேகம் செய்யும் போதும், பெருமாளுக்கு வியர்த்துவிடும். பீதாம்பரத்தால் அந்த வியர்வையை ஒற்றி எடுப்பார்கள். ஏனெனில்,ஏழுமலையான் சிலை எப்போதும் 110 டிகிரி பாரன்ஹுட் வெப்பத்திலேயே இருக்கும் இது ஒரு அதிசயம் தானே! ஒவ்வொரு வியாழக் கிழமையும், ஏழுமலையானுக்கு அபிஷேகம் செய்வதற்கு முன்னதாக நகைகளைக் களைவர். அப்போது ஏழுமலையானின் ஆபரணங்கள் சூடாகக் கொதிப்பதை உணர்கின்றனர்.



❖ இங்குள்ள மடைப்பள்ளிமிகவும் பெரியது. இங்கு லட்டு, பொங்கல், தயிர்சாதம், புளிச்சாதம், வடை, முறுக்கு, ஜிலேபி, அதிரசம், போளி, அப்பம், பாயாசம், தோசை, ரவாகேசரி, பாதாம்கேசரி, முந்திரிப்பருப்பு கேசரி ஆகியவை தினமும் தயாராகின்றன. இதில் லட்டு முதலிடம் பெற்று விளங்குகிறது.

❖ ஏழுமலையானுக்கு ஒருபுதிய மண்சட்டியிலேயே பிரசாதம் படைப்பர். தயிர்சாதம் தவிர வேறு எந்த நைவேத்யமும், கர்ப்பகிரகத்திற்கு முன்னுள்ளகுலசேகரப்படியைத் தாண்டுவதில்லை. இந்த மண்சட்டியும், தயிர்சாதமும் பிரசாதமாக கிடைப்பதை வாழ்வில் மிகப்பெரிய பாக்கியமாகப் பக்தர்கள் கருதுகின்றனர்.

❖ பெருமாளுக்கு உடுப்பு மிகவும் பிரத்யேகமாகத் தயாரிக்கப்படுகிறது. ஒரு முழம் நீளமும், ஆறு கிலோ எடையும் கொண்ட பட்டுப்புடவை பீதாம்பரமே இவருக்குரிய ஆடையாகத் திகழ்கிறது. இதை பெருமாளுக்கு சாத்த அலுவலகத்தில் 12 ஆயிரத்து 500 ரூபாய் செலுத்த வேண்டும். இந்த ஆடைக்கு மேல்சாத்து வஸ்திரம் என்று பெயர். வெள்ளியன்று மட்டுமே இதை அணிவிக்க முடியும். பணம் செலுத்தியவர்கள் வஸ்திரம் சாத்த 3 வருடங்கள் காத்திருக்க வேண்டும்.

❖ உள்சாத்து வஸ்திரம் பெருமாளுக்கு அணிவிப்பர். இதற்குரிய கட்டணம் 20 ஆயிரம் ரூபாய். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 15 வஸ்திரங்கள் சாத்துவதற்கு அனுமதிக்கிறார்கள். பணம் செலுத்தியபின் இதைஅணிவிக்க 10 வருடங்கள் காத்திருக்கவேண்டும்.

❖ பக்தர்கள் சமர்ப்பிக்கும்வஸ்திரங்கள் தவிர, அரசாங்கம் சமர்ப்பிக்கும் வஸ்திரங்களை ஆண்டுக்கு இரண்டு முறை பெருமாளுக்கு அணிவிக்கின்றனர்.

❖ ஏழுமலையானின் அபிஷேகத்திற்கு எங்கிருந்து பொருட்கள் வருகிறது தெரியுமா?

ஸ்பெயினில் இருந்து குங்குமப்பூ,




மதுரை சித்திரை திருவிழாவை காணவரும் பக்தர்களை வருக வருக என்று அன்புடன் வரவேற்கிறோம்



இறைபணியில் P.முருகேசன் உரிமையாளர்

சுவாமி விலாஸ் விபூதி ஸ்டோர்

186, 6வது தெரு பெரியப்பா நகர், பழனி, செல்9443012588

நேபாளத்தில் இருந்து கஸ்தூரி, சீனாவில் இருந்து புனுகு, பாரீசில் இருந்து வாசனைத் திரவியங்கள் வருகின்றன. ஒரு தங்கத் தாம்பாளத்தில் சந்தனத்தோடு கரைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்படும். 51 வட்டில் பால் அபிஷேகம் செய்தபின், கஸ்தூரியும், புனுகும் சாத்துவர். தினமும் காலை 4.30 5.30 மணிக்குள் அபிஷேகம் நடக்கும். அபிஷேகத்திற்கு ஆகும் செலவு ஒரு லட்சம். பணம் செலுத்தியவர்கள் 3 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும்.

- ❖ பெருமாளுக்குரிய ரோஜாப்பூக்கள் ஐரோப்பாவில் உள்ள ஆம்ஸ்டர்டாமில் இருந்து விமானத்தில் கொண்டு வரப்படுகின்றன. ஒரு ரோஜாப்பூவின் விலை ரூ.80. பக்தர்களின் செலவிலேயே இந்தப் பூக்கள் வந்து சேர்கின்றன.
- ❖ சீனாவில் இருந்து கற்பூரம், அகில், சந்தனம், அம்பர், தக்கோலம், லவங்கம், குங்குமம், தமாலம், நிரியாசம் போன்ற வாசனைப்பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன.
- ❖ ஏழுமலையானின் நகைகளின் மதிப்பு பல ஆயிரம் கோடி ரூபாய். இவருடைய நகைகளை வைத்துக் கொள்ள இடமும் இல்லை. சாத்துவதற்கு நேரமும் இல்லை.
- ❖ ஏழுமலையான் சாத்தியிருக்கும் சாளக்கிராம தங்கமாலை 12 கிலோ எடை கொண்டது. இதை 3 அர்ச்சகர்கள் சேர்ந்துதான் சாத்தமுடியும். சூரிய கடாரியின் எடை 5 கிலோ. ஒற்றைக்கல் நீலம் மட்டும் 100 கோடி மதிப்பு கொண்டது. உலகிலேயே இதைப்போன்ற நீலக்கல் வேறு கிடையாது.
- ❖ பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகரமன்னர்கள் பெருமாளுக்கு காணிக்கைகளைச் செலுத்தியுள்ளனர். ராஜேந்திரச்சோழன், கிருஷ்ண தேவராயர், அச்சுதராயர் ஆகியோருடைய திருப்பணிகள் கல்வெட்டு மற்றும் செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளன.
- ❖ மராட்டிய மன்னர் ராகோஜி போன்ஸ்லே மிகப்பெரிய எமரால்ட் பச்சைக்கல்லை பெருமாளுக்கு காணிக்கையாக்கியுள்ளார். இப்பதக்கம் இவருடைய பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலில் பலதிருப்பணிகள் செய்த கிருஷ்ணதேவராயர் தனது மனைவியுடன் நிற்கும் சிலை கோயிலில் உள்ளது. கோயிலுக்குள் வரிசையில் செல்லும் போது இதைக் காணலாம்.
- ❖ அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்வதற்கான வெள்ளி வெங்கடாஜபதி விக்ரகம் 966ம் ஆண்டில் செய்யப்பட்டதாகும். பல்லவ மன்னன் சக்திவிடங்கனின் மனைவி காடவன் பெருந்தேவி இந்த விக்ரகத்திற்குரிய நகைகள் தந்துள்ளார்.
- ❖ வெள்ளிக்கிழமைகளிலும், மார்கழி மாதத்திலும் பெருமாளுக்கு வில்வார்ச்சனை செய்யப்படுகிறது.
- ❖ மகா சிவராத்திரியில் எக்ஷத்ரபாலிகா என்ற உற்சவம் நடைபெறும். அன்று உற்சவர் வைர விபூதி நெற்றிப்பட்டை அணிந்து திருவீதியுலா எழுந்தருள்வார். தாளப்பாக்கம் அன்னமய்யா ஏழுமலையானையே பரப்பிரம்மமாகவும், சிவாம்சமாகவும், சக்தி அம்சமாகவும் பாடிய பாடல்கள் சிறப்பானவை.
- ❖ அபிஷேகத்தின் போது ஏழுமலையான் தன்னுடைய மூன்றாவது கண்ணைத் திறக்கிறார் என்ற ஐதீகம்உள்ளது.
- ❖ திருமலை திருப்பதி கோயில் ஸ்தலவிருட்சம் புளியமரம்.
- ❖ சாத்வீக கோலத்தில் இருந்தாலும் தெய்வீக கோலங்களில் ஆயுதம் இடம் பெற்றிருக்கும். ஆனால், திருமலையில் ஏழுமலையான் எவ்விதமான ஆயுதமும் பிடிக்காமல் நிராயுதபாணியாக சேவை சாதிக்கிறார்.
- ❖ ஆங்கிலேயர்களில் சர்தாமஸ் மன்றோ, கர்னல்ஜியோ ஸ்டிராட்டன், லெவெல்லியன் என்ற வீரர் ஆகியோர் பெருமாளின் பக்தர்களாக இருந்ததோடு பல நேர்த்திக் கடன்களைச் செலுத்தியுள்ளனர். இதில் இன்று வரை பெருமாளுக்கு மன்றோ தளிகை என்றொரு ஒரு நிவேதனம் ஆங்கிலேயர் பெயரால் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.
- ❖ திருப்பதி அலமேல்மங்கைக்குரிய ஆடைகத்வால் என்னும் ஊரில் பருத்தியில் தயாரிக்கப்படுகிறது. செஞ்சு இனத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் இதை பயபக்தியுடன் நெய்கிறார்கள். தாயாரின் திருமேனியில் படும் இந்த ஆடையை நெய்யும் போது மூன்றுவேளை குளிப்பதும், மாமிசம் உண்ணாமல் இருப்பதும் ஆகிய நடைமுறைகளைத் தவறாமல் பின்பற்றுகின்றனர்.
- ❖ ஏழுமலையான் அபிஷேக நீர் குழாய் மூலம் இங்குள்ள புஷ்கரணியிலேயே (கோயிலை ஒட்டிய தெப்பக்குளம்) மீண்டும் கலக்கிறது. ஏழுமலையானின் திருமேனியில் பட்டதால் அந்நீரின் புனிதத்தன்மையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது.
- ❖ 1180 கல்வெட்டுகள் இங்கு உள்ளன. இதில் 1130 கல்வெட்டுகள் தமிழ் மொழியிலும், 50 கல்வெட்டுகள் தெலுங்கு மற்றும் கன்னடமொழியிலும் அமைந்துள்ளன.





# 108 திவ்ய தேசங்கள்

108 திவ்ய தேசங்களானது 12 ஆழ்வார்களால் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் பாடப்பெற்ற சிறப்புமிக்க விஷ்ணுவின் திருத்தலங்கள் ஆகும். அவற்றை ஒவ்வொன்றாக கீழே பார்ப் போம்

1 திருவரங்கம், திருச்சி (பூலோக வைகுண்டம்)
2 திருக்கோழி, திருஉறையூர் (உறையூர் பகுதி), திருச்சி
3 திருத்தஞ்சை மாமணிக் கோயில், தஞ்சாவூர்
4 அன்பில் சுந்தர்ராஜப்பெருமாள், திருச்சி
5 உத்தமர் கோயில், திருச்சி
6 திருவெள்ளறை, திருச்சி
7 புள்ளபூதங்குடி, கும்பகோணம்
8 கோயிலடி, திருச்சி
9 ஆதனூர் ஆண்டளக்கும் ஐயன் கோயில்,கும்பகோணம்
10 தேரழுந்தூர் ஆமருவியப்பன் கோயில், குத்தாலம்
11 சிறு புலியூர், சீர்காழி
12 திருச்சேறை சாரநாதப்பெருமாள் கோயில், கும்பகோணம்
13 தலைச்சங்காடு, சீர்காழி
14 கும்பகோணம் சாரங்கபாணி சுவாமி கோயில், கும்பகோணம்
15 கண்டியூர், தஞ்சாவூர்
16 ஒப்பிலியப்பன், கும்பகோணம்
17 திருக்கண்ணபுரம், சீர்காழி
18 திருவாலி, திருநகரி, சீர்காழி
19 நாகப்பட்டினம் (திருநாகை)
20 நாச்சியார்கோயில், கும்பகோணம்
21 நாதன் கோயில், கும்பகோணம்
22 திருஇந்தளூர், மாயவரம்
23 திருச்சித்ரகூடம், சிதம்பரம், சீர்காழி
24 திருக்காழிச்சீராம விண்ணகரம், சீர்காழி
25 திருக்கூடலூர் (கூடலூர் ஆடுதுறை), கும்பகோணம்
26 திருக்கண்ணங்குடி, சீர்காழி
27 திருக்கண்ணமங்கை, கும்பகோணம்
28 கபிஸ்தலம், கும்பகோணம்
29 திருவெள்ளியங்குடி,


உலகப் பிரசித்தி பெற்ற மதுரை சித்திரை திருவிழாவை காணவரும் பக்தர்களை வரவேற்கிறோம்

SRI MEENAKSHI ENTERPRISES

Field Water Testing Kit

GSTIN: 33AEIPR3550G1ZK
MSME: UDYAM-TN-12-0045963 ISO 14001:2015




96295 68728
Contact:

No.78, Fathima School Street, Vandipathai Road, Athikulam, Madurai-62501,
E-mail: srimeenakshiftk2022@gmail.com

கும்பகோணம்
30 திருமணிமாடக் கோயில், சீர்காழி
31 வைகுந்த விண்ணகரம், சீர்காழி
32 அரிமேய விண்ணகரம், சீர்காழி
33 திருத்தேவனார்த் தொகை, சீர்காழி
34 வண்புருடோத்தமம், சீர்காழி
35 செம்பொன் செய்கோயில், சீர்காழி
36 திருத்தெற்றியம்பலம், சீர்காழி
37 திருமணிக்கூடம், சீர்காழி
38 திருக்காவளம்பாடி, சீர்காழி
39 திருவெள்ளக்குளம், சீர்காழி
40 திருப்பார்த்தன் பள்ளி, சீர்காழி
41 திருமாலிருஞ்சோலை, மதுரை
42 திருக்கோஷ்டியூர், திருகோஷ்டியூர்
43 திருமெய்யம், புதுக்கோட்டை
44 திருப்புல்லாணி, இராமநாதபுரம்
45 திருத்தண்கால், மதுரை
46 திருமோகூர், மதுரை
47 கூடல் அழகர் கோயில், மதுரை
48 ஆண்டாள் திருக்கோவில், திருவில்லிபுத்தூர்
49 ஆழ்வார்திருநகரி ஆதிநாதன் கோயில்,திருக்குருகூர், (நவதிருப்பதி) திருநெல்வேலி
50 திருத்துலைவில்லி, மங்கலம் இரட்டைத் திருப்பதி (நவதிருப்பதி) திருநெல்வேலி
51 வானமாமலை, திருநெல்வேலி
52 திருப்புளிங்குடி, (நவதிருப்பதி) திருநெல்வேலி
53 திருப்பேரை, (நவதிருப்பதி) திருநெல்வேலி
54 ஸ்ரீவைகுண்டம், (நவதிருப்பதி) திருநெல்வேலி
55 திருவரகுணமங்கை (நத்தம்), (நவதிருப்பதி) திருநெல்வேலி
56 திருக்குளந்தை, (நவதிருப்பதி) திருநெல்வேலி
57 திருக்குறுங்குடி திருநெல்வேலி
58 திருக்கோளூர், (நவதிருப்பதி) திருநெல்வேலி
59 பத்மநாபசாமி கோயில், திருவனந்தபுரம், கேரளா
60 திருவண்பரிசாரம் (திருப்பதிசாரம்), கன்னியாகுமரி
61 திருக்காட்கரை, கேரளம்கோட்டயம்
62 திருமூழிக்களம், கேரளம் கோட்டயம்
63 திருப்புலியூர், கேரளம் – கோட்டயம்
64 திருச்செங்குன்றூர், கேரளம் – கோட்டயம்
65 திருநாவாய், கேரளம் – திருச்சூர்
66 திருவல்லவாழ், கேரளம் – கோட்டயம்
67 திருவண்வண்டூர், கேரளம் – கோட்டயம்
68 ஆதிகேசவ பெருமாள், திருவட்டாறு, கன்னியாகுமரி
69 திருவித்துவக்கோடு, கேரளம்திருச்சூர்
70 திருக்கடித்தானம், கேரளம் – கோட்டயம்
71 திருவாறன்விளை, கேரளம் – கோட்டயம்
72 திருவயிந்திபுரம், கடலூர்
73 திருக்கோவலூர், கடலூர்
74 திருக்கச்சி, காஞ்சிபுரம்
75 அட்டபுயக்கரம், காஞ்சிபுரம்
76 திருத்தண்கா(தூப்புல்), காஞ்சிபுரம்
77 திருவேளுக்கை, காஞ்சிபுரம்
78 திருப்பாடகம்கா, காஞ்சிபுரம்
79 திருநீரகம், காஞ்சிபுரம்
80 நிலாத்திங்கள், காஞ்சிபுரம்
81 திரு ஊரகம், காஞ்சிபுரம்





82 திருவெக்கா, காஞ்சிபுரம்
83 திருக்காரகம், காஞ்சிபுரம்
84 திருக்கார்வானம், காஞ்சிபுரம்
85 திருக்கள்வனூர், காஞ்சிபுரம்
86 திருப்பவள வண்ணம், காஞ்சிபுரம்
87 திருப்பரமேச்சுர விண்ணகரம், காஞ்சிபுரம்
88 திருப்புட்குழி, காஞ்சிபுரம்
89 திருநின்றவூர், சென்னை
90 திரு எவ்வுள், சென்னை
91 திருநீர்மலை, சென்னை
92 திருவிடவெந்தை, சென்னை
93 திருக்கடல்மல்லை, சென்னை
94 திருவல்லிக்கேணி, சென்னை
95 திருக்கடிகை (சோளிங்கர்), சென்னை
96 திருவேங்கடம், ஆந்திரம்
97 அகோபிலம் (சிங்கவேள்குன்றம்), ஆந்திரம்
98 திருவயோத்தி, உத்தரப் பிரதேசம்
99 நைமிசாரண்யம், உத்தரப் பிரதேசம்
100 முக்திநாத், நேபாளம்
101 பத்ரிகாச்ரமம், உத்தராகண்ட்
102 தேவப்ரயாகை, உத்தராகண்ட்
103 திருப்பிரிதி, உத்தராகண்ட்
104 திருத்துவாரகை, குஜராத்
105 வடமதுரை, டெல்லி
106 ஆயர்பாடி, டெல்லி
107 திருப்பாற்கடல் (புவியில் இல்லை)
108 பரமபதம் நாதன் திருவடி


भारत सेवक समाज
BHARAT SEVAK SAMAJ
NATIONAL DEVELOPMENT AGENCY PROMOTED BY GOVERNMENT OF INDIA
ஆயூஷ் மருத்துவமனைகளில்
பணிபுரிய ஓர் அரிய வேலைவாய்ப்பு
மத்திய அரசு பதிவு பெற்ற
BSS சான்றிதழுடன் கூடிய 6 மாத காலம்
ஆயுர்வேத பஞ்சகர்மா
சிகிச்சை பற்றிய படிப்பு

இந்த பயிற்சியினை நிறைவு செய்த மாணவ, மாணவியர்
இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருகின்றனர்.
மேலும் விபரங்களுக்கு :
Dr.S.தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., M.D., FICA., PG Geriatrics
Dr.K.தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை
130A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், பழங்காநத்தம், மதுரை-3.
செல்: 75026 99666
aanmeegamalar.com

# தமிழ்மாதங்கள் தோறும் திருவிழா காணும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில்

சித்திரைதிருவிழா முதல் பங்குனி வசந்த உற்சவவிழா வரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் தமிழ் மாதம் தோறும் திருவிழாக்கள் நடை பெற்றுவருகிறது.

மீனாட்சி சுந்தரேசுவரர் கோவி லில் ஆண்டு முழுவதும் பல் வேறு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இறைவனின் 64 திருவிளையாடல்கள் வெவ்வேறு காலங்களில் இங்கு நடைபெறும், சித்திரை மாதம் முதல் பங்குனி வரை அனைத்து மாதமும் இங்கு விழாக் கோலம்தான்.

ஒவ்வொரு மாதமும் கொண் டாடப்படும் விழாவை பற்றி தெரிந்து கொள்வோம்.

தமிழ்நாட்டில் பல்வேறு இடங் களில் சித்ரா பவுர்ணமி விழா கொண்டாடப்பட்டாலும், மதுரையில் தான் சித்ரா பவுர்ணமி விழா சிறப் பாக கருதப்படுகிறது. ஒருமுறை விருத்ராசுவரன், விஸ்வரூபன் என்ற இருவரை தேவேந்திரன் கொன்றாள். அவர்கள் பிறப்பால் அந்தணர்கள்



ஆனதால் இந்திரனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து கொண்டது.

அதிலிருந்து விடுபட தன் குருவை நாடி உபாயம் கேட்டான். குருபகவான் அவனிடம் பூலோகம் சென்று பல்வேறு சிவஸ்தலங்களில் வழிபட்டால் ஓரிடத்தில் உன்கெடுதல் நீங்கும் என்று கூறி னார்.

அதன்படி இந்திரன் காசி முதலிய பல தலங்களில் வழிபட்டு தெற்கு நோக்கி வந்தான். ஓரிடத்தில் கடம்ப மரத்தின் கீழ் சென்றவுடன் தன்னை பற்றியிருந்த தோவும் விலக் கண்டான்.

இந்திரன் மகிழ்ச்சியடைய அவன் முன் கடம்ப மரத்தடியில் சிலபெரு மான் திருஆலவாய் சோமகந்தார் அவனுக்கு காட்சி கொடுத்தார்.

இந்திரன் சிவபெருமானுக்கு கோவில் கட்ட நினைத்து தேவலோ கத்தில் இருந்து ஒரு விமானம் வர வழைத்தான்.

இத்தலத்து இறையனுக்கு இந் திரன் விமானம் அமைத்ததால்




அதற்கு இந்திர விமானம் என்றும், விண்ணில் இருந்து வந்ததால் விண்ணிழி விமானம் என்றும் சொல்லப்படுகிறது.

இந்திரனிடம் ஒவ் வொரு வருடமும்சித்ரா பவுண்மி நாளில் என்னை இங்கு வந்து வழிபடுக என்று கட்டளையிட்டார். ஒவ்வொரு வருடமும் சித்ரா பவுர்ணமி நாளில் இந்திரன் இங்கு வந்து வழிபடுகிறான் என்று திருவிளையாடல் புராணம்கூறுகிறது.

அதனால் தான் சித்ராபவுர்ணமி மதுரையில் சிறப்பாக கருதப்படுகிறது.

வைகாசி வைகாசி மாதம் கோடை வசந்த திருவிழா, திரு வாதிரை நட்சத்திரத்தியே இருந்து பத்து நாட்கள் எண்ணெய்க் காப்பு நடக்கிறது.

ஆனி மாதம் மகம் நட்சத்திரத்திருந்து ஊஞ்சல் உற்சவம். தினமும் மாலை ஆறு மணியில் இருந்து இரவு ஒன்பது மணி வரைக்கும் நூறு கால் மண்டபத்தில் ஒரே ஊஞ்சலில் சுந்த ரேசுவரர் மீனாட்சி அமர்ந்து ஊஞ்சலாட, கோயி லின் ஓதுவார்கள். மாணிக்க வாசகரின் பொன்னூஞ் சல் பாடங்களை பாட ஊஞ்சல் உற்சயம் நடை பெறுகிறது.

பத்து நாளைக்கு முளைக் கொட்டு உற்சவம் நடை பெறு கிறது. கொடியேற்றம் மீளாட்சிக்கு மட்டுமே நடைபெறும்.

ஆவணி மாதம் மூலத் திருநாள், ஆவணி மூல உற்சவம் என்றே பெயர் பெற்றது. நான்கு ஆவனி வீதிகளிலும் அம்பாளும், சுந்தரேசுவாரும் வீதி உலா வருவார்கள் திரு விளையாடல், பிட்டுக்கு மண்ட சுமந்த திரு விளையாடல், நரியை பரியாக்கியது. விறகு விற்றல் போன்ற திருவிளை யாடல்கள் நடைபெறும். மூல நட்சத்திரத்தின்று சுந்தரேசு வரருக்கு பட்டாபி சேகம் நடைபெறுகிறது.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி கொலு விழா நடை பெறுகிறது. ஒவ்வொரு அலங்காரத்தில் மீனாட்சி அலங் காரத்தை காண ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

ஐப்பசி மாத பிரதமையிலிருந்து அமாவாசை நாளிற்கு அடுத்த நாள் சஷ்டி, அமாவாசை நாளிலிருந்து ஆறாவது நாள் வரையிலும் கோலாட்ட உற்சவம். புது மண்டபத்திலே அம்மன் கொலுவிருந்து மதுரை இளம்பெண்கள் கூடி யிருந்து கோலாட்டமாட உற்சவம் நடக்கிறது.

கார்த்திகை மாதம் பத்து நாட்கள் தீப உற்சவம். கார்த்திகை தீபதின்னத்தில் அம்மன் சன்னதியிலும் சுந்தரேசுவரர் சன்னதியிலும் சொக்கப்பனை கொளுத்தப் படுகிறது.

மார்கழி தனுர் மாத வழக்கப்படி காலையில் சீக்கிரமே நடை திறந்து இரவு ஒன்பது மணிக்கு நடுநிசி முடிந்து விடுகின்றது. தினமும் வெள்ளியம்பல நமாளர்சன்னதியி லிருந்து மாணிக்கவாசகர்முன்பாக கோவிலின் ஆஸ்தான ஓதுவார்கள் திருவெம்பாவை பாடல் களை பாடி போற்றுவார்கள். அதிகாலை 5.30மணியில் இருந்தே இது நடக்கும். இதில் பத்து 'நாட்கள்' எண்ணெய்' காப்பு நடக்கும். இந்த பத்து நாட்களும் சுவாமியும், அம்பாளும் புறப்பாடு கிடையாது. மாணிக்கவாசகர் மட்டுமே புறப்பாடு நிகழ்வு நடைபெறும். பதினோராம் நாள் ரிஷபவாகனத்தில் அம்மன் சுவாமி ஆடி வீதியில் வலம் வருகிறார்.

தை தை மாதம் தெப்பத் திருநாள் நடக்கும். வண்டியூரில் திருமலை நாயக்கரால் தோண்டப்பட்ட தெப்பக்குளத்தில் வசந்த மண்டபத்தில் தெப்பம்' கட்டி சுவாமியையும், அம்பாளையும் அதில் எழுந்தருளச் செய்து தெப்பவிழா நடைபெறும்.



மாசி மக உற்சவம் பங்குனி வசந்த உற்சவம் மண்டல உற்சவம் நடைபெறும். இதுதவிர பங்குனி உத்திரம், சாரதா நவராத்திரி இரண்டும் சேர்ந்து வரும் திருவிழா. பங்குனி மாதத் கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து உத்திரம் நட்சத்திரம் வரை அம்மனும் சுவாமி யும் வெள்ளியம்பலத்திலேயே அமர்ந்து பக்தர்களுக்கு காட்சி கொடுப்பார்கள். சுவாதி நட்சத்திரத்தன்று இருவரும் மகனின் திருமணக்கோலம் காண திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு எடுத்து செல்லப்படுகிறார்கள். மேலும் அகிலம்போற்றும் அன்னை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தினசரி பூஜைகள் செய்யப்படுவதுடன் சிவபெருமானுக்கு உகந்த நாட்களாக கருதப்படும் அனைத்து நாட்களிலும் சிறப்பு பூஜைகள் செய்யப்படுகின்றன.

aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com



ஸ்ரீ லெட்சுமி ஆட்டோ ஸ்பேர்ஸ்

அனைத்து டூவீலர் வாகனங்களுக்கும் உதிரி பாகங்கள்

குறைந்த விலையில் கிடைக்கும் சேல்ஸ் & சர்வீஸ்

சாஸ்தா நகர், சிவகங்கை மெயின்ரோடு மானாமதுரை-630 666

புதிய கிளை: தாகியார்நகர், மானாமதுரை

96989 55068 /99521 24373

D.தனபாலன்

பத்திர எழுத்தர்



பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்

மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606

# பக்தர் கனவில் தோன்றி மீண்டு வந்த

# பூதநாராயண பெருமாள் கோவில்



திருவண்ணாமலை வடக்குமாட வீதியில் உள்ளது அருள்மிகு பூதநாராயணப்பெருமாள் திருக்கோயில். இத்திருக்கோவில் இக்கோவில் வரலாறு மிகவும் சுவாரஸ்யமானதாகும், மன்னரால் உருவாக்கப்பட்ட கோவில் காலப்போக்கில் மறைந்து தற்போது திரும்பவும் புதிய பொலிவுடன் கட்டப்பட்டு வழிபாடு நடந்து வருகிறது.

கிருஷ்ண பரமாத்வால் தனக்கு அழிவு உண்டாகும் என்பதை அறிந்த கம்சன், அவரை அழிக்கப் பல யுக்திகளைக் மேற்கொண்டான். ஆனால், அவனால் கிருஷ்ணரை நெருங்கக்கூட முடியவில்லை. ஒருகட்டத்தில் பூதனை என்ற அரக்கியை தந்திரமாக அனுப்பி வைத்தான். அவள் ஒரு அழகியாக உருவெடுத்து, கிருஷ்ணரிடம் சென்றாள். அவரைத் தூக்கிக் கொண்டு கொஞ்சினாள். வந்திருப்பது அரக்கி என்று தெரிந்தும், ஒன்றும் தெரியாதவர் போல கிருஷ்ணர் நடித்தார்.




பூதனை அவரை தன் மடியில் வைத்துக் கொண்டு, பாசமுடன் தாய் போல நடித்து பால் கொடுத்தாள். கிருஷ்ணரும் பால் அருந்துவது போல நடித்து, அவளை வதம் செய்தார். இதனால், கிருஷ்ணருக்கு பூதநாராயணர் என்ற பெயர் ஏற்பட்டது. இந்த வடிவத்தில் மன்னர் ஒருவர் திருவண்ணாமலையில் ஒரு கோயில் எழுப்பினார். பிற்காலத்தில் வழிபாடு மறைந்து, கோயிலும் மறைந்து போனது.

பல்லாண்டுகளுக்கு பின், இப்பகுதியில் வசித்த பெருமாள் பக்தர் ஒருவரின் கனவில் தோன்றிய சுவாமி, தான் மண்ணிற்கு அடியில் புதைந்திருப்பதை உணர்த்தினார். அதன்படி, இங்கு சுவாமி சிலையைக் கண்ட பக்தர், அவர் இருந்த இடத்தில் கோயில் எழுப்பினார்.

மகாவிஷ்ணு பூதநாராயணர் என்ற பெயரில் தேனி அருகிலுள்ள சுருளிமலையிலும், இங்கும் அருள்பாலிக்கிறார். இங்கு சுவாமி, கிருஷ்ணராக பால பருவத்தில் இருந்தாலும், பூதனையிடம் பால் அருந்தியதால் பூதாகரமாக பெரிய உருவத்துடன் காட்சியளிக்கிறார். இடது காலை மடித்து, வலது காலை குத்திட்டு அமர்ந்திருக்கிறார். வலது கையில் சங்கு மட்டும் உள்ளது.

இடது கையை பக்தர்களுக்கு அருள் தரும் அபய முத்திரையாக வைத்துள்ளார். தினமும் காலையில் இவருக்கு திருமஞ்சனம் செய்யப்படுகிறது. குணமுள்ள குழந்தை பிறக்க, பிறந்த குழந்தைகள் அறிவுப்பூர்வமாக இருக்க இவருக்கு வெண்ணெய், கல்கண்டு படைத்து, துளசி மாலை அணிவித்து வழிபடுகிறார்கள்.

நம்மிடமுள்ள கோபம், பொறாமை, காமம் போன்ற கொடிய குணங்களையே புராணங்களில் அசுரர்களாகவும், அரக்கிகளாகவும் உருவம் செய்துள்ளனர். இறைவனை வழிபாடு செய்வதன் மூலம், அவர்களது அருளால் இத்தகைய அசுர சக்திகளை அழித்து விடலாம். இதற்காக, புராணங்களில் தெய்வங்கள் அசுரர்களை வதம் செய்வதாக உருவகப்படுத்தப்பட்டது.

இங்கு, சுவாமி பூதகியை வதம் செய்தவராக இருப்பதால், தீய குணங்கள் அழிந்து, நற்குணங்கள் உண்டாகவும், பீடை, நோய்கள் நீங்கி ஆரோக்கியத்துடன் வாழவும் இங்கு வேண்டிக்கொள்கிறார்கள்.

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோயிலுக்கு அருகில், வடக்கு கிரிவலப்பாதையில் இக்கோயில் உள்ளது. பக்தர்கள் இவரை வணங்கி கிரிவலம் துவங்கி, இவரது சன்னதியிலேயே நிறைவு செய்கின்றனர்.

அப்போது, சுவாமியை வணங்கி சன்னதியில் தீர்த்தம் வாங்கி, வாசல் முன் அதை கொட்டுகின்றனர். அதாவது, கிரிவலம் செல்வதால் உண்டான பலனை கிருஷ்ணருக்கு சமர்ப்பணம் செய்து, மீண்டும் அதை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதாக ஐதீகம்.

வைகுண்ட ஏகாதசியன்று சுவாமி கருட வாகனத்தில் எழுந்தருளுவார். புரட்டாசி கடைசி சனிக்கிழமையன்று ஒரு மூடை அரிசியில் சாப்பாடு சமைத்து, சன்னதி முன் கொட்டி சுவாமிக்கு படைக்கின்றனர். பின், அதை பக்தர்களுக்கு பிரசாதமாகத் தருவர். கிருஷ்ணர் பெரிய வடிவில் இருப்பதால் இவ்வாறு செய்கிறார்கள்.

கிருஷ்ண ஜெயந்தியன்று சுவாமிக்கு விசேஷ திருமஞ்சனம் மட்டும் நடக்கும். ஏகாதசி, திருவோண நட்சத்திரம் மற்றும் பவுர்ணமி நாட்களில் சுவாமிக்கு விசேஷ திருமஞ்சனம் நடக்கும். எதிரி பயம் நீங்க, செயல்களில் வெற்றி கிடைக்க இங்குள்ள சக்கரத்தாழ்வாருக்கு புதன் கிழமைகளில் துளசி மாலை அணிவித்து, சர்க்கரைப் பொங்கல் நைவேத்யம் செய்து வழிபடுகின்றனர்.*

ஒரு பிரகாரத்துடன் அளவில் சிறிதாக அமைந்த கோயில் இது. திருவண்ணாமலையிலுள்ள புராதனமான பெருமாள் கோயில் இது மட்டுமே. சுவாமி எதிரே கருடாழ்வார், முன் மண்டபத்தில் தும்பிக்கையாழ்வார், ஆஞ்சநேயர் உள்ளனர். அருகில் சுதை சிற்பமாக மற்றொரு ஆஞ்சநேயர் இருக்கிறார்.

கிருஷ்ண ஜெயந்தி, ஏகாதசி, திருவோண நட்சத்திரம் மற்றும் பவுர்ணமி நாட்களில் சுவாமிக்கு விசேஷ திருமஞ்சனம் நடக்கும்.

எதிரி பயம் நீங்க, செயல்களில் வெற்றி கிடைக்க இங்குள்ள சக்கரத்தாழ்வாரை வழிபடுகின்றனர். குழந்தை பிறக்க, பிறந்த குழந்தைகள் அறிவுப்பூர்வமாக இருக்க இங்கு வழிபடுகின்றனர்.

aanmeegamalar.com





# பகைவர்கள் தொல்லை தீர்த்து திருமணத்தடையை போக்கும்

# வடபழனி ஆதிமூலப் பெருமாள் கோவில்








வடபழனி முருகன் கோவிலுக்கு அருகில் 600 ஆண்டுகள் பழமையான பெருமாள் கோவில் உள்ளது. வேலவனுடன், மாமன் மாலவன் இருக்கும் கோவில்கள் தமிழகத்தில் பல உள்ளன.

திருப்பரங்குன்றில் தெய்வானையை முருகன் மணமுடிக்கும் போது பவளக் கனிவாய்ப் பெருமாளாகவும், செந்தூரில் திருக்கோவில் பிரகாரத்தில் செந்தில் கோவிந்தனாகவும், பழமுதிர்ச்சோலையிலே மலைமீது முருகன் காட்சி தர, அடிவாரத்தில் சுந்தரராஜப் பெருமாளாகவும் அழகர் வடிவில் திருமால் அருளாட்சி செய்கிறார்.

இதுபோன்று முருகன் கோவில்களுக்கு அருகிலேயே காட்சி தரும் பெருமாளாக சென்னையில் புகழ்பெற்று விளங்கும் வடபழநி ஆண்டவர் திருக்கோவிலை ஒட்டி, தென்பகுதியில் 600 வருட பழமையான திருமாலின் திருக்கோவில் ஒன்று உள்ளது என்பது பெரும்பாலானோருக்கு தெரியாமலேயே இருந்துள்ளது.

வடபழனி முருகன் கோவிலைச் சுற்றி பூக்கடை, மாலை கடை என்று கடைகளின் ஆக்கிரமிப்பால் இக்கோவில் பெரும்பாலும் வெளியில் தெரியாமல் இருந்தது தற்போது இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டுள்ளதால், வடபழனி ஆதிமூலப் பெருமாள் கோவில் வாசல் பகுதி பக்தர்களின் பார்வைக்கு படுவதாக உள்ளது.

வடபழனி ஆதிமூலப் பெருமாள் கோவில் மிக எளிமை யானது. ஆலயத்தில் கருவறைக்குள், சூரியக் கதிர்கள் சென்று தினமும் சூரியபகவான் வணங்கியவாறு இருந்தது. தற்போது சில தடுப்புகளால் சூரியக் கதிர்கள் படுவதில்லை.

அமர்ந்த திருக்கோலத்தில் இடது திருவடியை மடித்து வைத்து, வலது திருவடியைத் தொங்கவிட்டு தாமரை மலர் மீது வைத்தபடி அருள்கிறார்.

மேலும் சங்கு, சக்கரம் ஏந்தியும், வரத ஹஸ்த முத்திரையுடனும் புன்னகை மிளிர காண்போரை கவர்ந் திழுக்கும் தோற்றத்தில் இவர் வீற்றிருக்கிறார். இருபுறமும் நில மகளும், திருமகளும் இருந்து அருள் மழை பெய் கின்றனர்.

இங்கே உற்சவ மூர்த்தியாக கஜேந்திர வரதப் பெருமாள் பேரருள் புரிகிறார். எனவே இத்தலம், மகாவிஷ்ணுவின் கஜேந்திர மோட்சம் என்னும் புராணக்கதை தொடர்புடைய




திருத்தலமாக கருதப்படுகிறது. மூலவருக்கு எதிரே பெரிய திருவடி என்று அழைக்கப்படும் கருட பகவான் வீற்றிருக்க, அர்த்த மண்டபத்தின் உள்ளே வடக்கு நோக்கி சிறிய திருவடியான வரத ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார்.

தெற்கு சன்னிதியில் உடையவர், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், மணவாளர், பாமா ருக்மணி சமேத கிருஷ்ணர் ஆகியோரின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. சுவாமி விமானத்துக்கு வலதுபுறம் தனிக் கோவிலில் விமானத்தின் கீழ் கருவறையில் அமர்ந்த கோலத்தில் ஆதிலட்சுமி தாயார் வீற்றிருக்கிறார்.

இந்த அன்னையின் உற்சவ மூர்த்தியாக பெருந்தேவி தாயார் இருக்கிறார். கோவில் வளாகத்தின் வட கிழக்குப் பகுதியில் பரந்து விரிந்த பசுமையான அரசும் வேம்பும் இணைந்து இயற்கைச் சூழலை இதமாக்குகின்றன. இதுவே ஆலயத்தின் தல விருட்சமாக உள்ளது.

குழந்தைப் பேறு வழங்கும் சந்தான கோபாலன், வழக்குகளில் வெற்றி தரும் வழக்கறு தும்பிக்கை ஆழ்வார், தோஷங்கள் போக்க வல்ல கல்யாண சர்ப்பம், தாய்மார்களின் கருவினைக் காக்கும் கர்ப்பஸ்வபினி தாயார், குடும்ப பிரச்சினைகள் நீங்கி இனிமை நிலவ செய்யும் சல்லாப நாகங்கள் என்று பல மூர்த்தங்கள், அரசமரத்தடியைச் சுற்றிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

எனவே நம் வாழ்வில் வரும் ஒவ்வொரு துயரங்களுக்கும் பரிகாரம் தரும் இடமாக இத்தலம் இருக்கிறது.

திருமணத்தடை விலக ஏற்ற பரிகாரத் தலம் என்று பகர்கிறார்கள். வயது அதிகரித்தும் திருமணம் கூடிவராத ஆண்களும், பெண்களும் இங்கே வந்து வழிபட்டு பரிகாரம் செய்து விட்டுச் செல்கிறார்கள். செவ்வாய்க் கிழமை தோறும் 16 வாரங்கள் நம்பிக்கையுடன் வர வேண்டும். முதல் வார செவ்வாய் அன்று 3 மாலைகளை வாங்கிவர வேண்டும். பெருமாள், தாயாருக்கு தலா ஒரு மாலையை அணிவித்து விட்டு, மூன்றாவது மலர் மாலையை திருமணத் தடையுள்ளவர்கள், தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டு 12 முறை வலம் வர வேண்டும்.

பிறகு ஒவ்வொரு செவ்வாயும் வந்து சேவித்து விட்டு, 16வது வார செவ்வாய் அன்று முதல் வாரத்தில் செய்தது போலவே மாலை யணிந்து சுற்றிவர வேண்டும். விரலி மஞ்சள் கிழங்கை மாலையாகக் கட்டி தாயாருக்கு சாற்றுவது மங்கல வாழ்வு தரும்.

திருமணம் கைகூடிய பின், ஒரு நன்னாளில் புதுமணத் தம்பதியராக வந்து ஆதிமூலம் வீற்றிருக்கும் ஆலயத்திற்குள் அடி வைத்து, இறைவனுக்கும், இறைவிக்கும் நேர்த்திக் கடன் செலுத்துவதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

இது தவிர, பகைவர்கள் தொல்லை விலகவும், மரண பயம் அகலவும், தீராத பிணிகள் தீரவும், கடன் கவலை குறையவும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் இத்தல இறைவனை வழிபட்டுச் செல்கிறார்கள். கல்யாணத்தடை நீங்க செவ்வாய்க்கிழமையும், கடன் பிரச்சினை தீர புதன் கிழமையும், செல்வம் செழிக்க வெள்ளிக்கிழமையும், புத்திரப் பேறு உண்டாக ரோகிணி நட்சத்திர தினமும் வழிபாட்டுக்குரிய சிறந்த நாட்களாகச் சொல்லப் படுகிறது.

ஒவ்வொரு புதன்கிழமை காலை 6.30 மணிக்கு மூலவர் திருமஞ்சனமும், வெள்ளி காலை 7 மணிக்கு தாயார் திருமஞ்சனமும் நடைபெறுவது வழக்கமாக உள்ளது. மக்கள் புரட்டாசி சனிக் கிழமைகளில் நீண்ட வரிசையில் நின்று சேவிக்கிறார்கள். இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருக்கும் வடபழநி ஆதிலெட்சுமி சமேத ஆதிமூலப் பெருமாள் கோவில், தினமும் காலை 6.30 முதல் 11.30 வரையிலும், மாலை 4.30 முதல் இரவு 8.30 வரையிலும் தரிசனத்துக்காக திறந்திருக்கும்.

தேக்கு மர கதவுகள்
(200 டிசைன்களில்)
ஜவஹர் மரக்கடை
ரெடிமேட் நிலை கதவு ஜன்னல்கள்
விரும்பிய மரங்களில் வாங்கிட
GOB, T.P.K.ரோடு, மதுரை-3
94433 18482

உறங்காபுளி கருப்பணசாமி துணை
அம்மாவின் கைவண்ணத்தில்
77085 95035
தங்கள் இல்ல சுப நிகழ்ச்சிகளுக்கு
ஆர்டரின் பேரில் மாவு
மொத்தமாகவும் சில்லரையாகவும்
அரைத்துத் தரப்படும்
குறள்
இட்லி தோசை மாவு
தயாபுரம் மானாமதுரை அனைத்து கடைகளிலும் கிடைக்கும்

# ராகு கேது தோஷங்கள் போக்கும் திருமோகூர் காளமேகப் பெருமாள்



திருமோகூர் திருத்தலம் 108 திவ்ய தேசங்களுள் 46வது திவ்ய தேசமாக திகழ்கிறது. இங்கே காளமேகப் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் நமக்குக் காட்சி தருகிறார்.

பாற்கடலில் அமிர்தம் கடையும் போது அதிலிருந்து ஒரு துளி அமிர்தம் இக்கோயிலில் உள்ள குளத்தில் விழுந்ததால், இக்கோயில் குளத்திற்கு பெரிய திருப்பாற்கடல், சிறிய திருப்பாற்கடல் என்ற பெயர் உண்டானது.

காளமேகப்பெருமாள் கிரீடம், சங்கு, சக்கரம் ஆகியவை வெண் கற்களால் செய்து அணிவிக்கப்பட்டுள்ளது. பெருமாளுக்கு சாளகிராம மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. சாளகிராமம் என்பது இமய மலையில் கிடைக்கும் ஒரு புனிதமான கல்.

இதனை மகாவிஷ்ணுவின் வடிவமாகவே பூஜிக்கின்றனர். சாளகிராமத்தை வீட்டில் வைத்து பூஜை செய்வது சிறந்த புண்ணிய பலன்களைத் தரும்.

அளவற்ற சக்தி வாய்ந்த சுதர்சன சக்கரம் இக்கோயிலில் உள்ளது. ஒருபுறம் ஸ்ரீ யோக நரசிம்மர், மறுபுறம் ஸ்ரீ சக்கரத்தாழ்வார்.

இக்கோயிலில் சக்கரத்தாழ்வாருக்கு சிறப்பு பூஜைகள், அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இங்கே சக்கரத்தாழ்வார், 16 கைகளுடனும், 16 வகையான ஆயுதங்களுடனும் காட்சி தருகிறார்.

நரசிம்மர் சங்கு சக்கரத்துடன் காட்சி தருகிறார். சக்கரத்தாழ்வார் சன்னதியில், ஒரு கல்லில் சக்கரத்தாழ்வாரை சுற்றி 154 எழுத்துக்களும், 48 கடவுள்கள் உருவங்கள், 6 வட்டங்களுள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆனி மாதம் சித்திரை நட்சத்திரத்தில் சக்கரத்தாழ்வாரின் பிறந்தநாள் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.*

இந்தத் திருத்தலம் நவக்ரஹ தோஷங்களை போக்கக் கூடிய ஸ்தலம். இதற்கு ஸ்ரீ மோகன க்ஷேத்திரம் என்ற பெயர் உண்டு. திருமோகூர் ராகு கேது ஸ்தலமாகும். ராகு கேதுவினால் உண்டாகும் தோஷங்களுக்கு திருமோகூர் பரிகார ஸ்தலமாக விளங்குகிறது.

கோயில் அமைவிடம்: மதுரை, மேலூர் வழித்தடத்தில் மதுரையிலிருந்து 10 கிமீ தொலைவில், இந்த அழகிய காளமேகப் பெருமாள் வீற்றிருக்கும் திருமோகூர் அமைந்துள்ளது. மதுரை மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்திலிருந்தும், பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்தும் நிறைய பேருந்துகள் இங்கே செல்கின்றன. மதுரையிலிருந்து ஒத்தக்கடை சென்று, அங்கிருந்து ஆட்டோவிலும் இந்த கோயிலுக்கு செல்லலாம்.

மாட்டுத் தாவணி பேருந்து நிலையத்திலிருந்து 7 km தொலைவிலும், பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 15 km தொலைவிலும், யானைமலை ஒத்தைக்கடை என்னும் ஊரில் இருந்து 2 km தொலைவிலும் அமைந்துள்ளது இந்த திருமோகூர் திருத்தலம். 5.1.22.



ரோட்டோரத்தில் உள்ள வறியவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தினமும் மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு

# நீங்களும் உதவலாமே!

நன்கொடைகளுக்கு வருமான 80G வரிவிலக்கு உண்டு

# மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்

இயலாதவர்களுக்கு உணவு வழங்குவது மூதாதையர்களுக்கு திதி கொடுத்த புண்ணியம் கிடைக்கும். Regd. No. 4-50/2021

மதுரையில் வீதியோரத்தில் உணவுக்காக தவித்துக் கொண்டு இருக்கிறவர்களுக்கு "மதுரையின் அட்சயப் பாத்திரம்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த 715 நாட்களுக்கு மேலாக தினந்தோறும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம். தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் போன்ற நாட்கள், பிற நாட்களிலும் இந்த புனிதப் பணிக்கு உதவிட அன்புடன் வேண்டுகிறோம். வாடிய பயிரை கண்டபோதெல்லம் வாடினேன் - வள்ளலார்

**ஒரு நாளைக்கு ஒருவருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ.12000 ஆகிறது**

25 நபர்களுக்கு - ரூ.1,000
50 நபர்களுக்கு - ரூ.2,000
100 நபர்களுக்கு - ரூ.4,000
200 நபர்களுக்கு - ரூ.8,000
250 நபர்களுக்கு - ரூ.10,000
300 நபர்களுக்கு - ரூ.12,000

இந்த புனிதமான பணிக்கு உதவ

**Maduraiyin Atchaya Paathiram Trust**

Cheque or DDமூலம் உங்களது முகவரி மற்றும் PAN நம்பருடன்அடியிற் கண்ட முகவரிக்கு அனுப்பிட வேண்டுகிறோம்

**9442630815 (G-Pay)**

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை-16
**9442630815 (G-Pay)**

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006



## தரிசிக்க வாருங்கள்!

# காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவா கோவில் (க்ருஹம்)

13, பொன்மேனி நாராயணன் ரோடு,
எஸ்.எஸ்.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் குருவார தினத்தன்று சிறப்பு புஷ்பாஞ்சலி நடைபெறும். வியாழன் அன்று நடைபெறும் குருவார நிகழ்வில் பங்கேற்கும் அனைவருக்கும் ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும். அனுஷ நட்சத்திர தினத்தன்று ஸ்ரீ மஹா பெரியவா விக்ரஹம் மற்றும் வெள்ளி பாதுகைக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

அனுஷ வைபவத்திற்கு தங்களின் அருட்கொடையினை வழங்கிட அன்பு வேண்டுகோள்



*ஸ்ரீ மஹா பெரியவா அருட்பணியில்...*
**Rtn.நெல்லை பாலு,**
நிறுவனர், அனுஷத்தின் அனுகிரஹம்
செல் : 9442630815(G-Pay)



உலகப் பிரசித்திப் பெற்ற மதுரை, மானாமதுரை, பரமக்குடி சித்திரைத்திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்

# ஸ்ரீ அழகர்மலையான்

## தங்கமாளிகை, பஸ் டிரான்ஸ்போர்ட்

**916 KDM தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் கிடைக்கும்**

**எங்களிடம் சுற்றுலா செல்ல A/C, AIR பஸ்கள் வாடகைக்கு கிடைக்கும்**














அன்புடன் அழைக்கும்

**C.தெட்சணாமூர்த்தி** செல்: 9442041899 / 7373041899

மகர் நோன்பு பொட்டல் செல்லும் வழி, காரைக்குடி

அன்புடன் அழைக்கும்

**T.தனசேகரன்** செல்: 9384290449 / 9443465663

ரவி ஹோட்டல் காம்ளக்ஸ் சிப்காட், சிவகங்கை ரோடு, மானாமதுரை


aanmeegamalar.com